## வரலாறு - பகுதி 1 to 6

# பண்டைய கால இந்திய வரலாறு

## 1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த டைனோசரஸ் என்ற விலங்கின் முட்டைகள் அரியலூர் பகுதியில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்தவை.

- நமக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் பற்றிய தகவல்களை ஆதாரங்களுடன் தொகுத்துக் கால வரிசைப்படி கூறுவது ஆகும்.
- வரலாற்றின் தந்தை ஹொராடெட்டஸ்.
- திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூரில் 100 ஆண்டுகளாக அகழ்வாராய்ச்சிப் பணிகள் நடந்து வருகின்றன. கி.பி. 2004 ல் ஒரே இடத்தில் 160க்கும் அதிகமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதனால், அங்கு நீண்ட காலத்துக்கு முன்னரே மனிதர்கள் வாழ்ந்துள்ளனர்.
- மக்கள் வாழ்ந்த காலம், அக்கால நிகழ்வுகள், உணவுமுறை, பண்பாடு, பழக்க வழக்கம், ஆட்சிமுறை, கலை, இலக்கியம் போன்றவற்றைப்பற்றி அறிய உதவும் எழுதப்பட்ட ஆதாரங்கள் மற்றும் பழங்காலப் பொருள்கள் முதலியன வரலாற்று ஆதாரங்கள் எனப்படும்
- வரலாற்றுக் காலம், வரலாற்றுக்கு முந்தைய காலம் என்று வரலாற்றினை இரு காலக்கட்டங்களாகப் பிரிக்கலாம்.
- அக்கால மனிதர்கள் குறித்த எழுத்துப்பூர்வமான ஆதாரங்களும், பிற ஆதாரங்களும் கொண்ட காலத்தை வரலாற்றுக் காலம் என்கிறோம்.

### எழுத்துப் பூர்வமான ஆதாரங்கள்

இலக்கியங்கள், வரலாற்றுக் குறிப்புகள், கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள், ஓலைச் சுவடிகள்.

**வரலாற்றுக்கு முந்திய காலம்**

- இதனை கற்காலம் (ம) உலோக காலம் என வகைப்படுத்தலாம்.
- கற்களினாலான ஆயுதங்களையும் கருவிகளையும் பயன்படுத்திய காலம் கற்காலம்.
- உலோக காலம் - செம்புக் காலம், வெண்கலக் காலம், இரும்புக் காலம் எனப்படும்.

**வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை அறிய உதவும் ஆதாரங்கள்**

அக்காலத்தைச் சார்ந்த பொருள்கள், சிதைவுகள், கற்கள், மரங்கள், விலங்குகளின் கொம்புகள், எலும்புகள், கற்கருவிகள், மண்டை ஓடுகள், படிமங்கள் போன்றவை.

**வரலாற்றுக்கு முற்பட்ட காலம்- வகைகள்**

| | |
|---|---|
| பழைய கற்காலம் - Palaeolithic age | (கி.மு. 10000 ஆண்டுகளுக்கு முன்) |
| புதிய கற்காலம் - Neolithic age | (கி.மு. 10000 - கி.மு. 4000) |
| செம்புக் கற்காலம்- Chalcolithic age | (கி.மு. 3000 - கி.மு. 1500) |
| இரும்புக் காலம்- Iron age | (கி.மு. 1500- கி.மு. 600) |

ஆதிமனிதன் பயன்படுத்திய கற்கருவிகளைக் கொண்டு கற்காலத்தைப் பழைய கற்காலம், புதிய கற்காலம் என இரண்டாகப் பிரிக்கலாம்.

**பழைய கற்காலம் (Palaeolithic Age) (சுமார் கி.மு. 10,000 வரை)**

- இந்த மக்கள் குவார்ட்சைட் என்று அழைக்கப்பட்டனர்.
- இம்மக்கள் ஒரே இடத்தில் நிலையாகத் தங்கி வாழாமல் நாடோடிவாழ்க்கை வாழ்ந்தனர். காடுகளில், மரக்கிளைகளிலும், மரப்பொந்துகளிலும், குகைகளிலும் தங்கினான்.

- சிக்கிமுக்கிக் கற்களைப் பயன்படுத்தி நெருப்பை உண்டாக்கினான். இதனை விலங்குகளை அச்சுறுத்தி விரட்டவும் பின்னர் இறைச்சியை வதக்கவும், குளிரிலிருந்து காத்துக்கொள்ளவும் பயன்படுத்தினர்.
- இடி, மின்னல், முதலியவற்றுக்குப் பயந்து அவற்றை வணங்கினான். தன்னைக் குளிர், வெயில், மழை போன்றவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக இலை, தழைகள், மரப்பட்டைகள், விலங்களின் தோல் ஆகியவற்றை உடையப் பயன்படுத்தினான்.
- கரடு முரடான கற்கள், மரக்கிளைகள், எலும்புகள், விலங்குகளின் கொம்புகள் முதலியனவற்றைக் கருவிகளாகப் பயன்படுத்தினான்.
- காய்கள், கனிகள், கிழங்குகள், இறைச்சி முதலியவற்றை உண்டான்.
- ஒரே பகுதியில் காய், கனி, கிழங்குகள் கிடைக்காத போது, காட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் உணவைத் தேடி இடம் பெயர்ந்து வேட்டையாடி உண்டான்.
- பயிரிடுதல் மற்றும் மட்பாண்டங்கள் செய்தல் போன்றவற்றை அவர்கள் அறிந்திருக்கவில்லை.
- வேட்டையாடக் கற்கள், எலும்புகள், மரக்கொம்புகள், விலங்குகளின் கொம்புகள் போன்றவற்றைக் கருவிகளாகப் பயன்படுத்தினான். முதலில் சிறுசிறு விலங்குகளைத் தனியாக வேட்டையாடினான். பின்னர், கூட்டத்துடன் சென்று வேட்டையாடினான். வேட்டையில் ஆண்களும் பெண்களும் பங்கேற்றனர்.
- மடியில் குழந்தையைக் கட்டிக் கொண்ட ஒரு பெண் அம்பு விடுவது போன்ற ஓவியம் மத்தியப் பிரதேசத்திலுள்ள பிம்பேட்கா குகையில் உள்ளது. இந்த ஓவியத்தால் பெண்களும் வேட்டையாடினர் என்பதை அறிய முடிகிறது.
- கரடு முரடான கற்களை வேட்டையாடும் கருவிகளாக பயன்படுத்தினர். ராபர்ட் புருஸ் பூட் என்பவர் முதன் முதலில் இந்த கருவிகளை சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரத்தில் கண்டறிந்தார்.
- சென்னையை அடுத்துள்ள கொற்றலையாற்றின் சமவெளியிலும், வட மதுரையிலும், கைக்கோடாரிகள் மற்றும் சிறிய கற்கருவிகள் கிடைத்தன.

- குகைகளில் யானை, கரடி, மான் ஆகியவற்றை வேட்டையாடும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன.
- இறைவன் அல்லது சமயம் குறித்த சிந்தனை இல்லை. இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறைகளும் இல்லை.

**முக்கியத் தோற்றங்களின் ஆண்டுகள்**

| | |
|---|---|
| பூமியின் தோற்றம் | 460 கோடி ஆண்டுகளுக்கு முன் |
| மனிதனின் தோற்றம் | 40,000 ஆண்டுகளுக்கு முன்(ஹோமோசெப்பியன்ஸ்) |
| வேளாண்மை தோன்றிய காலம் | 8,000 ஆண்டுகளுக்கு முன் |
| நகரங்களின் தோற்றம் | 4,700 ஆண்டுகளுக்கு முன் |

**இந்தியாவில் பழைய கற்காலக் கருவிகள் கிடைக்கப்பெற்றுள்ள இடங்கள்**

| | |
|---|---|
| மத்தியப் பிரதேசம் | சோன் ஆற்றுப்படுகை, பிம்பேட்கா, மஹேஸ்வா |
| இராஜஸ்தான் | லூனி ஆற்றுச் சமவெளி |
| கர்நாடகம் | பாகல்கோட் |
| ஆந்திரப்பிரதேசம் | கர்னூல் குகைகள், ரேணிகுண்டா |
| தமிழ்நாடு | வடமதுரை, அத்திரம்பாக்கம், பல்லாவரம், காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர் |

**புதிய கற்காலம்(Neolithic Age)**

- மனித நாகரிக வளர்ச்சியின் அடுத்த படிநிலையைப் புதிய கற்காலம் எனலாம்.
- அக்காலத்தின் முக்கிய மாற்றம் உணவைத் தானே உற்பத்தி செய்துகொள்ள முயன்றான். பயிர்த்தொழில் வேளாண்மையும் பிராணிகளையும் வளர்க்கத்

தொடங்கினர். நெல், திணை, காய்கள், கனிகள் போன்றவற்றை பயிரிட்டனர்.

- கோழி, நாய், ஆடு, பசு, மாடு, எருது முதலியவற்றை வளர்த்தான். மேய்ச்சல் தொழில் செய்தான்.
- மனிதன் முதலில் பழக்கிய விலங்கு நாய். இது வேட்டையின்போது உடன் சென்று உதவியது. ஆடு, மாடுகளை மேய்த்துப் பால், முதலியவற்றை உணவாகக் கொண்டான்.
- சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டது. அதனைப் பயன்படுத்தி ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பொருட்களை கொண்டு செல்லவும், மண்பாண்டங்களையும் செய்தனர்.
- மென்மையான படிகக்கற்களால் ஆன செதுக்கப்பட்ட நயமான, கூர்மையான கற்கருவிகளைப் பயன்படுத்தினான். கல்லைத் தீட்டிக் கூராக்கி அதற்கு எலும்பு, மரம் முதலியவற்றால் கைப்பிடிகள் பொருத்தினான்.
- கோடாரி, எலும்புக் கைப்பிடிகள், தூண்டில் முள், ஊசிகள், வெட்டுக் கருவிகள் போன்றவை பயன்படுத்தப்பட்டன.
- குகைகளை விட்டுவிட்டு களிமண் குடிசைகள் மற்றும் கூரை வீடுகள் அமைத்து ஓரிடத்தில் தங்கி கூட்டமாக வாழ்ந்தான். குடிசைகள், வட்டம் அல்லது நீள்வட்ட வடிவமானவை. இவை தரைமட்டத்திற்குக் கீழ், பள்ளமாக்கப்பட்ட இடங்களில் அமைக்கப்பட்டன.
- புதிய கற்காலத்தில், இறந்தோரைப் புதைக்கும் பழக்கம் இருந்தது. புதைக்கும் போது, அவர்களுடன் பழகிய விலங்குகளையும் சேர்த்து, வீட்டின் முற்றத்திலேயே புதைத்தனர்.
- நெசவுத் தொழில் அறிந்திருந்தனர். பருத்தி ஆடைகள் பிரபலம் சாயம் துவைக்கப்பட்ட வண்ண ஆடைகளையும், வளையல்கள், கழுத்தணிகள் போன்றவற்றை பயன்படுத்தினர். அணிகலன்கள், கிளிஞ்சல்கள், எலும்புத் துண்டுகளினால் செய்யப்பட்டன.

- இறந்தோரை தாழியில் வைத்து அடக்கம் செய்தனர். இறந்தோரை வழிபட்டனர் சமய சடங்குகளும் வளர்ந்தன.
- பழைய கற்காலக் கருவிகள் கிடைக்கப்பெற்ற இடங்கள் : பல்லாவரம், காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர்.
- புதிய கற்கால மண்பாண்டங்கள் கிடைத்துள்ள இடங்கள் : திருநெல்வேலி, சேலம், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தாண்டிக்குடி (கொடைக்கானல் மலை)

**உலோகக்காலம்**

- மனிதன் முதன் முதலில் கண்டறிந்த உலோகம் செம்பு ஆகும்.
- வட இந்தியாவில் கற்காலத்தை அடுத்த காலத்தை செம்புக் காலம் என்றார்.
- தெ இந்தியாவில் மனிதன் இரும்பைக் கண்டறிந்தான். சென்னைக்கு அருகில் உள்ள பெரும்புதூர் என்ற இடத்தில் கற்கால கருவிகளுடன் இரும்புக் கருவிகளும் கண்டெடுக்கப்பட்டன. எனவே தமிழ்நாட்டில் கற்காலத்தை அடுத்த காலம் இரும்புக் காலம் என்றழைக்கலாம்.
- உலோக காலத்தில் வேளாண்மை பெரும் வளர்ச்சி கண்டது. நெல் சாகுபடி, பாசன முறைகள் இரும்புக் கருவிகள் கொண்டு விவசாயம் வளர்ந்தன.

**செம்புக் கற்காலம்(Chalcolithic Age)**

- புதிய கற்கால முடிவில் செம்பு (தாமிரம்) என்னும் உலோகத்தின் பயனை அறிந்தனர். செம்பினால் கருவிகள் செய்தனர். அத்துடன் சிறு கற்கருவிகளையும் பயன்படுத்தினர். எனவே, அக்காலம் செம்புக் கற்கருவிகள் காலம் என்று குறிப்பிடப்படுகிறது.
- அக்காலத்தில் மக்கள் பயன்படுத்திய மண்பாண்டங்களின்மேல் வண்ண ஓவியங்கள் வரைந்தனர். இவை வரிக்கோலங்களாக அமைந்து இருந்தன. ஹரப்பா நகர நாகரிகம் இக்காலத்தைச் சேர்ந்தது.

- இந்தக் காலத்தில் தான் தகரத்தையும் தாமிரத்தையும் சேர்த்து வெண்கலம் என்ற புதிய உலோகம் தயாரிக்கப்பட்டது.

**இரும்புக் காலம்(Iron Age)**

- இரும்பினால் கருவிகள் செய்த காலம் இரும்புக்காலம் எனப்படும். இக்காலத்தில் வீட்டுச்சாமன்களும், பயிர்த்தொழில் கருவிகளும் இரும்பினால் செய்யப்பட்டன.
- உலோகத்தை உருக்கிக் கருவிகள் செய்ய அறிந்திருந்தனர். அவர்களிடம் கற்பனைத்திறன் காணப்பட்டது. வேதகால நாகரிகம் இரும்புக் காலத்தைச் சார்ந்தது.

**பெருங்கல் காலம்**

- பெருங்கல் என்பது நீத்தார் நினைவுச் சின்னம். புதிய கற்காலத்திற்குப்பின் வாழ்ந்தவர்கள் நீத்தார் நினைவுச் சின்னங்கள் அமைத்தனர். சிகப்பு மற்றும் கருப்பு நிற மண் தாழிக்குள் இறந்தோரின் உடல் மற்றும் அவர் பயன்படுத்திய பொருட்களை வைத்து புதைத்தனர். அதன் மேல் பெரிய பாறைக்கற்களை வட்டமாக அடுக்கினார்.
- காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, கடலூர், திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் பெருங்கற்காத்தார் நினைவுச் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டன.
- மண் தாழி அடக்கம்: இறந்தவரை மண் தாழிக்குள் வைத்தும் அடக்கம் செய்தனர். இவைகள் வட்டமாக உள்ள நினைவுச் சின்னம் இல்லை. தாழிக்குள் இரும்பு மற்றும் தங்கப்பொருட்கள், மற்றும் இரும்பினால் செய்யப்பட்ட வேல் கண்டெடுக்கப்பட்டன. எனவே முருகனை வழிபட்டனர் என்று தெரிகிறது.

## 2. சிந்துசமவெளி நாகரிகம்

### (கி.மு. 3250 முதல் கி.மு. 2750 வரை)

செம்புக் காலத்தில்தான், இந்தியாவில் மிகத் தொன்மை வாய்ந்த நகர நாகரிகமான சிந்துசமவெளி(ஹரப்பா) நாகரிகம் செழித்திருந்தது.

- சிந்து சமவெளி நாகரிகமே இந்திய நாகரிகத்தின் தொடக்கமாக விளங்குகிறது.
- பண்டைய இந்தியாவில் மூன்று நாகரிகங்கள் வளர்ந்தன. அவை, சிந்து சமவெளி (அ) ஹரப்பா, கங்கைச் சமவெளி நாகரிகம், சங்ககால நாகரிகம்.

**ஹரப்பா**

- ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆட்சி செய்தபோது 1856ம் ஆண்டு பஞ்சாப் மாநிலத்தில் சிந்துநதியின் கிளை நதியான ராவி நதிக்கரையில் இருப்புப்பாதை அமைத்தனர். அங்கு மணல் மேடு ஒன்றைக் கண்டனர். அதில் தரமான சுட்ட நீண்ட செங்கற்களும், கட்டிட இடிபாடுகளும் இருந்ததைக் கண்டனர். அந்தக் கட்டடச் சுவர்களின் நேர்த்தியான செங்கற்களை எடுத்துச் சென்று ரயில் பாதைக் கட்டமைப்புகளைச் செய்து கொண்டனர். பல கட்டிடங்களின் சுவர்கள் அவ்வாறு பிரித்துப் பயன்படுத்தப்பட்டன.
- 1921 ல் அகழ்வு ஆராய்ச்சியாளர்கள் அதே பகுதியை அகழ்வு ஆராய்ச்சி செய்து தொன்மை இந்தியாவின் முதுபெரும் நகர்ம் என்பதைக் கண்டறிந்தனர்.
- 'ஹரப்பா' என்ற சிந்தி மொழிச் சொல்லுக்குப் புதையுண்ட நகரம் என்பது பொருள். அதனை அடுத்துக் கண்டறியப்பட்ட சிந்து சமவெளி நாகரிகத்தின் பிற நகரங்கள் யாவும் ஹரப்பா நாகரிகம் என்றே ஆய்வு செய்யப்பட்டன.
- சுமார் 4,700 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்நாகரிகம் இந்தியாவில் இருந்ததாகக் கண்டறியப்பட்டது. இதைப்போன்ற மொகஞ்சதாரோ,

winmeen

சான்குதாரோ, கலிபங்கன், லோத்தல் போன்ற வேறுபல இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டன.

- மொகஞ்சதாரோ மற்றும் ஹரப்பா என்னுமிடத்தில் சர் ஜான் மார்ஷல் ஆராய்ச்சி செய்தார். அது J.M.மக்கே, G.F. டேல்ஸ், M.S. வாட்ஸ் ஆகியோரால் தொடரப்பட்டது.
- 1922 ல் சிந்து மாகாணம் லர்காணா மாவட்டத்தில் மொகஞ்சதோரோ நகரம் தோண்டி எடுக்கப்பட்டது.
- ஹரப்பா(லர்காணவும்) தற்போது பாகிஸ்தானில் உள்லது. லோத்தல் என்னும் துறைமுகம் குஜராத்தில் உள்ளது.
- சிந்து சமவெளி மக்களுக்கு இரும்பு பற்றி தெரியாது. கலப்பையையும், அரிவாளையும் பயன்படுத்தினர். அளவு கோலும், எடைக்கற்களும் பயன்பாட்டில் இருந்தது.
- 2000 மேற்பட்ட சின்னங்கள் உள்ளன. இவைகள் சுடுமண் சுதையுனால் வேகவைக்கப்பட்டு வியாபாரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**பெருங்குளம்**

- சிந்து சம்வெளி நகரங்களின் கோட்டைப் பகுதியில்கட்டடமைப்பு நுணுக்கங்கள் மிக்க குளம் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன(11.88 x 7.01 x 2.43)
- குளத்தின் இரு பக்கங்களிலும் படிக்கட்டுகள் இருந்தன. குளத்துக்கு அருகில் உடைமாற்றும் அறைகள் இருந்தன.
- குளம் மெழுகு பூசிய சுட்ட செங்கற்களால் நீர் கசியாமல் இருக்குமாறு இணைத்துக் கட்டப்பட்டிருந்தது.
- குளங்கள் கிணற்று நீரால் நிரப்பப்பட்டிருந்தன. குளத்திலிருந்து அழுக்கு நீர் வெளியே செல்லவும் தனிக்கால்வாய் அமைக்கப்பட்டிருந்தது.

**கட்டடங்கள்**

- வீடுகம் வரிசையாகவும், ஒழுங்காகவும் நேர்த்தியுடனும் கட்டப்பட்டிருந்தன.
- இரு அறைகள் கொண்ட சிறுவீடுகள் முதல் மாடி வீடுகள் வரை வலவிதமான கட்டிடங்கள், மண்டபம், தானியக் களஞ்சியம் போன்ற பொதுக்கூடங்களும் இருந்தன. இவையாவும் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன.
- பொதுவாக வீடுகளில் ஜன்னலகள் இல்லை. ஒவ்வொரு வீட்டிலும் கிணறும், குளியலறையும் காணப்படுகின்றன. வீடுகளின் முன் குப்பைத் தொட்டிகள் அமைக்கப்பட்டிருந்தன.

**நகர அமைப்பு**

- சிந்து சமவெளி நகரங்கள் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தன. பொதுவாக, நகரின் வடபகுதி குறுகலாகவும் உயரமாகவும் இருந்தது. ஆய்வாளர்கள், பாதுகாப்பிற்கான கட்டமைப்பாக இதனைக் கருதுகின்றனர். அந்நகரின் கிழக்குப் பகுதி விரிந்தும், சற்றுத் தாழ்வாகவும் அமைந்துள்ளது.
- உயரமான கோட்டை(சிட்டாடல்), தாழ்ந்த நகரம், குடிசைகள் என இருந்தன. தாழ்வான நகர் பகுதியில் சிறு வியாபாரிகளும், கைவினைக் கலைஞர்களும் வசித்தனர்.
- மொகஞ்சதாரோ என்ற சிந்தி மொழிச் சொல்லுக்கு இடுகாட்டுமேடு / இறந்தவர்களின் நகரம் என்பது பொருள்.
- வல்லுநர்களால் திட்டமிடப்பட்ட பின்னரே நகரங்கள் கட்டமைக்கப்பட்டன. நகரங்களை ஆட்சி செய்ய உரிய நிருவாக அமைப்பு இருந்திருக்கக் கூடும். அகன்ற சாலைகளின் இருமருங்கிலும் வீடுகள் சீராகக் கட்டப்பட்டு இருந்தன. தளம் அமைத்த வீடுகளும் அடுக்கு மாடி வீடுகளும் கட்டப்பட்டிருந்தன.

**ஆட்சி முறை**

- பொதுக் கழிவுநீர்த் திட்டம், பொதுக்குளம், பொதுமண்டபம், தெரு விளக்குகள், தெருக்களில் காணப்படும் குப்பைத்தொட்டிகள் போன்றவை அங்கு நகர நிருவாகம் (உள்ளாட்சி அமைப்பு) சிறப்பாகச் செயல்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றன.
- சிந்து சமவெளி மக்கள் பாபிலோனியா, சுமேரியா, எகிப்து, மெசபடோமியா போன்ற நாடுகளுடன் கடல் வணிகம் செய்தனர். உள்நாட்டு, வெளிநாட்டு வணிகங்களும் இருந்தது.
- கோட்டைப் பகுதியில் தானியக் களஞ்சியம், மக்கள் கூடும் நகர மன்றம், இருந்தன. மொகஞ்சதாரோவில் உள்ள மிகப்பெரிய கட்டடம் தானியக் களஞ்சியம். ஹரப்பாவில் 6 தானியக் களஞ்சியங்கள் இருந்தன.
- நக்ர்மன்றம் பொதுக்கூட்டம் 61 அ நீளமும் 23.4 அ. அகலமும் கொண்டது.

**பாதாளச்சாக்கடை**

வீட்டுக் கழிவுநீர், மூடப்பட்ட சரிவுள்ள சிறுகால்வாய்கள் வழியாகத் தெருவிலுள்ள பொதுக் கால்வாயில் இணைந்துள்ளன. கால்வாய்ச் சந்திப்புகளில் திறந்து பழுதுபார்க்கும் மூடிகளும் அமைந்து இருந்தன.

**பயன்பாட்டு அறிவியல்**

- கட்டடத் தொழில், நிலம் தேறுதல், மனை அலவீடு, கால்கொளுதல், தரமான கட்டுமானப் பொருள்களைத் தேர்ந்தெடுத்தல், வடிவக் கணித அமைப்புப் பற்றி அறிதல் முதலிய பயன்பாட்டு அறிவியல்(Applied Science) தொழில் நுட்பங்கள் நடைமுறையில் இருந்தன.

**சிந்து சமவெளி மக்களின் வாழ்க்கை முறை**

- இங்கு வரிசையான குடியிருப்புகள் காணப்படுகின்றன. அவை நகராட்சி நிருவாகப்பணியில் ஈடுப்பட்டிருந்தோருக்கானவை எனக் கருதப்படுகின்றன.

- மக்கள் கடல்வழி வாணிகம் செய்து உலோகங்கள், விலையுயர்ந்த கற்கள், அணிகலன்கள் மற்றும் பல்வேறு பயன்பாட்டுப் பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்தனர்.

**கைத்தொழில்**

- எழுத்துப்பணி செய்வோர், முத்திரைகள் தயாரிப்போர், கட்டடப் பணியாளர்கள், மரச்சாமான்கள், பொம்மைகள் படைப்போர் மற்றும் பிற கைவினைஞர்கள் எனத் தொழிலாளர் பலர் இங்கு இருந்திருக்கக்கூடும்.
- குழந்தைகள் விளையாடும் சுடுமண் பொம்மைகளும், கிளிஞ்சல், பித்தளை, செம்பு, வெள்ளி, தங்கம் முதலியவற்றால் செய்யப்பட்ட பல விளையாட்டுப் பொருள்களும் இங்கு காணப்படுகின்றன.
- ஆயுதங்கள், வீட்டுச்சாமான்கள், கருவிகள் முதலியவற்றைச் செய்யச் செம்பையும், வெண்கலத்தையும் பயன்படுத்தினர்.
- தங்கமும் வெள்ளியும் அணிகலன்கள் செய்யப் பயன்பட்டன.
- எடைக்கற்கள் ஒருவகைத் திண்மையான கற்களால் தயாரிக்கப்பட்டிருந்தன.

**சுடுமண் முத்திரைகள்**

- செவ்வக வடிவிலான நூற்றுக்கணக்கான முத்திரைகளும் இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சித்திர வடிவிலான எழுத்துகள் எழுதப்பட்டுள்ளன. அவ்வெழுத்துக்களை இதுவரை இனங்காண இயலவில்லை.
- களிமண் முத்திரைகளில் காளைகள், வண்டி, புறா, படகுகள் யோகமுத்திரையில் அமர்ந்துள்ள ஒருவரின் வடிவம், சுடுமண் உருவப் பொம்மைகள் முதலியன காணப்படுகின்றன.

**எழுத்து முறை**

- இங்குக் கண்டெடுக்கப்பட்ட சுட்ட களிமண் பலகைகளின் மீது எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை சித்திர எழுத்துகளாகும்.
- முத்திரைகளில் பொறிக்கப்பட்டிருந்த படங்களும், எழுத்து வடிவங்களும் எழுத்துக் கலையில் பெற்றிருந்த தேர்ச்சியைப் புலப்படுத்துகின்றன.
- ஒவ்வொரு சித்திரமும், ஒரு குறிப்பிட்ட கருத்தைப் புலப்படுத்துகின்றது.
- ஏடுகளில் வரிகள் வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கமாகவும், இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கமாகவும் எழுதப்பட்டுள்ளன. இவ்வெழுத்துக்கள் தொல்-தமிழ் எழுத்துடன் உறவுடையன என்று கூறப்படுகிறது.

**தொழில்**

- சிந்து சமவெளியில் பயிர்த்தொழிலாளர், கைத்தொழிலாளர், வணிகர், நெசவாளர்கள், மண்பாண்டங்கள் செய்வோர், உலோக வேலை செய்வோர் காணப்பட்டனர்.
- நெற்பயிரை முதன்முதலில் விளைவித்தவர்கள் சிந்து சமவெளி மக்கள். விவசாயம் மக்களின் முக்கியத் தொழிலாகும்; கோதுமை, பார்லி போன்றவற்றை விளைவித்தனர்; மிஞ்சிய தானியங்களைக் களஞ்சியங்களில் சேமித்து வைத்தனர்.
- நெசவுத் தொழிலும் தெரிந்திருந்தனர். டெரகோட்டா எனப்படும் சுடு மட்பாண்டத் தொழில் மூலம் பொம்மைகள், சிலைகள் தயாரித்தனர்.
- காளை, எருது, ஆடு, பன்றி, கழுதை, ஒட்டகம் போன்ற கால்நடைகள் வளர்த்தனர்.

**உடைகள்**

- மக்கள் பருத்தி, கம்பளி ஆடைகளை அணிந்தனர். வேட்டி போன்றவற்றைக் கீழ் ஆடையாகவும், சால்வையை மேல் ஆடையாகவும் அணிந்தனர்.

**அணிகலன்கள்**

- ஆண், பெண் இருபாலரும் பற்பல அணிகலன்களை(ஒட்டியாணம், கைக்காப்பு_ அணிந்தனர். தங்கம், வெள்ளி, தந்தம், விலையுயர்ந்த கற்கள் போன்றவற்றை அணிகலன்கள் செய்யப் பயன்படுத்தினர்.
- ஏழை மக்கள் கிளிஞ்சல், தாமிரம் போன்றவற்றால் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்தனர்.

**கலைகள்**

- சிந்து சமவெளி மக்கள் டெர்ரகோட்டா(Terracotta) எனப்படும் சுடுமண் பாண்டம் செய்வதில் திறமை மிக்கவர்களாக இருந்தனர்.
- பறவைகள், விலங்குகள், ஆண், பெண் உருவங்கள், எருதுகளால் இழுக்கப்படும் ஓட்டுபவருடன் கூடிய வண்டி, மண்பாண்டங்கள், குவளைகள் போன்ற பொம்மைகள் கண்டு எடுக்கப்பட்டுள்ளன.

**சிற்பம்**

- மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்டுள்ள வெண்கலத்தால் ஆன நாட்டிய மங்கையின் உருவச்சிலை.
- தாடியுடன் காட்சிதரும் ஒருவரின் சுண்ணாம்புக்கல் சிலை முதலியன, அக்கால மக்களின் சிற்ப வேலைத்திறனுக்குச் சான்றுகளாகும்.

**சமயம்**

- மொகஞ்சதாரோவில் கண்டு எடுக்கப்பட்ட பொருள்கள் அங்கு வாழ்ந்த மக்களின் சமயக் கோட்பாடுகளையும், சமயப்பற்றினையும் அறிவிக்கின்றன.
- பசுபதி என்ற சிவனையும், பெண் கடவுளையும், லிங்கம், சூலம், மரம் முதலியவற்றையும் வணங்கினர்.
- இறந்தவர்களைப் புதைக்கும் போது உணவு, அணிகலன்களையும் சேர்த்துத் தாழிகளிலிட்டுப் புதைத்தனர்.

- அரசமரம் புனிதமானது. மறுபிறவி நம்பிக்கை இருந்தது.

**சமூகம்**

- சிந்து சமவெளி மக்கள் முதல் குழு அல்லது ஆளும் குழுவைச் சேர்ந்தவர்கள் மேடான கோட்டைப் பகுதியில் வசித்தனர்.
- இரண்டாவது குழுவில் சிறுவியாபாரிகள், கைவினைஞர்கள், கைத்தொழிலாளிகள் இருந்தனர்.
- மூன்றாவது வகையை சார்ந்த தொழிலாளிகள் சிறு குடிசைகளில் வசித்தனர்.

**நகரங்களின் அழிவிற்கான காரணங்கள்**

- மரத்தால் ஆனபொருள்கள் காணப்பெறாமையால் அவை பெருந்தீயில் அழிந்திருக்கலாம்.
- உள்நாட்டுப்போரில் தோன்றிய கலகத்தின் விளைவாகவும் அவை அழிந்திருக்கலாம்.
- இயற்கைக் காரணங்களாலும், அடிக்கடி மாறும் தன்மையுள்ள சிந்து ஆற்றின் வெள்ளப்பெருக்கினாலும் அவை புதையுண்டிருக்கலாம்.
- ஆரியர்கள், இந்நகரங்களை அழித்து முன்னேறியிருக்கலாம்.
- மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்டுள்ள மனித எலும்புக்குவியல், அந்நகரம் அயலவரின் படையெடுப்புக்கும் உள்ளாகி இருக்கலாம் எனச் சான்று பகர்கிறது.

## 3. வேதகாலம்

சிந்து சமவெளி, ஹரப்பா நகரங்கள் அழிந்த பின் மத்திய ஆசியப் பகுதியிலிருந்து கைபர், போலன் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்த ஆரியர்கள் பஞ்சாப் பகுதியில் சப்த சிந்து(7 நதிகள் பாயும் நிலம்) என்ற இடத்தில் குடியேறினார்கள்.

கால்நடைகளை மேய்க்கும் தொழில் செய்த ஆரியர், புதிய புதிய புல்வெளிகளைத் தேடிக்கொண்டு இடம் விட்டு இடம் பெயர்ந்தனர்.

சுமார் 4,000 ஆண்டுகளுக்கு முன் (கி.மு. 2000 முதல் கி.மு.1500 க்கு இடைப்பட்ட காலம்) இந்தியாவிற்குள் நுழைந்த ஆரியர், பின்னர் சில நூற்றாண்டுகளில் வட இந்தியா முழுவதிலும் பரவிக் குடியமர்ந்தனர்.

- இந்தியாவில் அவர்கள் குடியேறிய பகுதி ஆரிய வர்த்தம் எனப்பட்டது. ஆரியர்கள் கால்நடைகளைக் கொண்டு வாழ்வு நடத்தினர்.
- ஆரியர்கள் நாகரிகம் கிராம நாகரிகமாகும். ஆரி என்றால் அந்நியர் / வெளிநாட்டவர் என்று பொருள்படும்.
- தங்கள் இனப்பெரியோர் பாடிய வேண்டுதல்களை வேதங்களாகத் தொகுத்தனர். வரலாற்றில் இக்காலகட்டம் வேதகாலம் என்று அழைக்கப்படுகிறது.
- வேதகாலம் முற்பட்ட வேதகாலம், பிற்பட்ட வேதகாலம் எனப் பிரித்து அறியப்படுகிறது.
- வேதங்கள் 4. ரிக், யஜூர், சாம, அதர்வண வேதங்கள்.
- வேதம் என்றால் அறிவு என்று பொருள். 10 பாகங்களக் கொண்ட பழமையான ரிக் வேதம் 1028 பாடல்களை உடையது.
- வேதகால இலக்கியங்கள்: பிராமணங்கள், உபநிடதங்கள், ஆரண்யங்கள், புராணங்கள், மகாபாரதம், ராமாயணம் போன்றவைகள்.

**உபவேதங்கள்**

- ஆயுர்வேதம் - மருத்துவம்
- தனுர்வேதம்- சண்டைப்பயிற்சி
- காந்தர்வ வேதம் - பாடல் கலை
- சில்ப வேதம் - கட்டடக் கலை

**ஆரியர்களின் சமூக சமுதாய அமைப்பு**

- குடும்பம் → கிராமம் → விஸ் → ஜனா → ஜனபதா என்பதாக அமைந்திருந்தது.

**முற்பட்ட வேதகாலம் அல்லது ரிக் வேதகாலம்**

**(கி.மு 2000 - கி.மு. 1000)**

- ரிக் வேதம் தொகுத்த காலத்தில் ஆரியர்கள் பெரும்பாலும், இன்றைய பாகிஸ்தானில் உள்ள சிந்துப்பகுதியிலேயே வாழ்ந்தனர்.
- ரிக்வேதத்தின் வாயிலாக வேதகால மக்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகளை அறிய முடிகின்றது.

**அரசியல்**

- சமுதாயத்தின் அடிப்படை அலகு குடும்பம்.
- பல குடும்பங்கள் இணைந்தது கிராமம். கிராமத்தின் தலைவர் கிராமணி. பல கிராமங்கள் இணைந்து விசு(விஸ்) என்ற பெரிய குழுவானது. இதன் தலைவர் 'விசுவபதி'.
- பெரிய ஆட்சி அமைப்பு 'ஜனா'. இதன் தலைவன் ராஜன் (அரசன்), வீரமும் வலிமையும் மிக்கவனே ராஜன் ஆனான். ராஜ்யத்தில் வாழ்ந்த மக்கள் பிரஜைகள் எனப்பட்டனர். அரசர் பிரஜாபதி என்றும் அழைக்கப்பட்டார்.
- அரசப்பதவி பரம்பரை உரிமையாகக் கருதப்பட்டது. மகாஜனபதம் என்பது பல சிற்றரசுகள் இணைந்த பெரிய அரசு ஆகும். ராஜாவிற்கு நிருவாகத்தில் உதவி செய்ய புரோகிதர், சேனானி (படைத்தலைவர்) போன்ற அதிகாரிகளும், சபா ((முதியோர் அவை),சமிதி (ஊர்மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அவை) போன்ற அமைப்புகளும் இருந்தன.

**அரசரின் கடமைகள்**

தனது ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பகுதியை அந்நியரின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாப்பது அரசரின் முதன்மையான கடமையாகும்.

- புரோகிதர் கூறுகின்றபடி சமயச் சடங்குகளைச் செய்வது தனது நாட்டு மக்களைப் பகை, போர், பஞ்சம் முதலியவற்றிலிருந்து பாதுகாப்பது, போர்க்காலங்களில் தம் படையுடன் அணிவகுத்து முன்னின்று எதிரிகளுடன் போர் புரிதல், குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரித்து நீதி, தண்டனை வழங்குதல், நாட்டின் எல்லைகளை விரிவாக்கி வலிமைப்படுத்துவது.

**சமூக வாழ்க்கை**

- ஆரியர்கள் தந்தை வழி மரபு பின்பற்றினர். குடும்பத்தின் தலைவன் தந்தை, தந்தை கிரகபதி என்றழைக்கப்பட்டார்.
- தொடக்கத்தில் ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் கல்வி கற்றனர். அவர்கள் ஆன்மிகம் போன்றவற்றில் திறம்பெற்று விளங்கினர்.
- விஸ்வவாரா, அபலா, கோசா, லோபமுத்ரா, கிகாதா, நிவாவரி, அபலா போன்ற கல்வியில் சிறந்த பெண் கவிஞர்களும் இருந்தனர்.
- முதலில் சாதிப்பிரிவுகள் தோன்றவில்லை.
- ஒருதார மணம், பலதாரமணம் ஆகியவை நடைமுறையில் இருந்தன. விதவைகள் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.
- பெண்கள் மதிக்கத்தக்க நிலையினை பெற்றிருந்தனர். பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். ஆணும் பெண்ணும் சமம்.

**பொருளாதார நிலை**

- ரிக் வேதகால மக்கள் கால்நடை வளர்ப்பையும், வேளாண்மையையும் வேட்டையாடுதலையும் முக்கியத் தொழில்களாகக் கொண்டனர்.
- இரும்பின் பயனை நன்கு அறிந்திருந்ததால் பல கருவிகள் செய்து, காடுகளை விளைநிலங்களாக்கினர்.

- தச்சி வேலையை செய்தனர். நூல் நூற்றல் மற்றொரு முக்கியத் தொழிலாகும். பருத்தி, கம்பளி ஆடைகளை உற்பத்தி செய்தனர்.
- பொற்கொல்லர்கள் அணிகலன்களையும், குயவர்கள் வீட்டுப் பயன்பாட்டிற்கான மண்பாண்டங்களையும் உற்பத்தி செய்தனர்.
- பண்டமாற்று முறை வழக்கத்திலிருந்தது. நதிகள் போக்குவரத்துக்குப் பயன்பட்டன. நிஷ்கா என்ற தங்க அலகுகள் வாணிகத்தில் பயன்படுத்தப்பட்டன.
- மேற்கு ஆசியா, எகிப்து போன்ற நாடுகளுடன் வணிகத்தொடர்பு கொண்டனர். அலங்காரப்பொருட்கள், சந்தனம், தந்தங்கள் ஆகியவைகள் ஏற்றுமதி செய்தனர். குதிரை, பேரிச்சம்பழம் முதலியவற்றை இறக்குமதி செய்தனர்.
- மல்யுத்தம், வீணை வாசித்தலும் தெரிந்திருந்தனர். தோல் செருப்புகள் பயன்படுத்தப்பட்டன.

**உணவு**

- வேதகால மக்கள் கோதுமை, பார்லி, பால், தயிர், நெய், காய்கறிகள், பழங்கள், இறைச்சி போன்றவற்றை உணவாகக் கொண்டனர்.
- சோமா எனும் செடியிலிருந்து சோமபானமும், பார்லியிலிருந்து தயாரிக்கப்பட்ட சுரா பானமும் அருந்தப்பட்டன.

**உடை மற்றும் அணிகலன்கள்**

- பருத்தி, கம்பளி உடைகளை உடுத்தினர். ஆண்கள் வேட்டி, சால்வை போன்ற உடைகளை உடுத்தினர். தலைப்பாகை அணிவது வழக்கத்திலிருந்தது.
- பெண்கள் வாசஸ் எனும் உள்ளாடை, நிவி என்னும் இடுப்பில் அணியும் ஆடை, ஆதிவாசஸ் எனும் மேலாடை போன்ற உடைகளையும் உடுத்தினர்.

- ஆண்களும், பெண்களும் அணிகலண்களை அணிந்தனர். காது வளையம், கழுத்து மாலை, கை வளையல், காற்சிலம்பு, தலையில் கட்டும் பட்டை போன்றவற்றை அணிந்தனர்.

**சமயம்**

- இயற்கையையும், அதன் சக்திகளையும் வணங்கினர். சூரியன், நெருப்பு, காற்று, வானம், மரங்கள் ஆகியவற்றை வழிபட்டனர்.
- இந்திரன், வருணன், அக்னி, எமன் ஆகிய கடவுள்களை வணங்கினர். கோயில்களோ, சிலை வழிபாடோ முந்தைய வேதகாலத்தில் இல்லை.
- ஆரியர்கள் யாகங்களையும், சமயச் சடங்குகளையும் செய்தனர். பின்னர் சமயம் சார்ந்த கருத்துகளும், விளக்கங்களும் தத்துவங்களாக இயற்றப்பட்டன. அவர்கள் நடத்திய யாகத்தீயில் பால், நெய், தானியம், பட்டு ஆகியவற்றையும் இட்டனர்.
- அஸ்வமேதம், இராஜசூயம், வாஜபேயம் ஆகிய யாகங்கள் நடத்தப்பட்டன.

**பிற்பட்ட வேதகாலம் (கி.மு. 1000 - கி.மு.600)**

- ரிக் வேத காலத்திற்குப் பின்னர் சாம, யஜூர், அதர்வண வேதங்களின் காலத்தைப் பிற்பட்ட வேதகாலம் எனலாம்.
- இக்காலத்தில் ஆரியர்கள் கிழக்கு நோக்கிப் பரவி இருந்தனர். (முற்பட்ட, வேதகால மக்கள் காபூலிலிருந்து-மேல்கங்கை வரை பரவி இருந்தனர்).
- இக்காலத்தில் விரிவான அரசுகள் எழுச்சி பெற்றன. பிராமணங்கள், ஆரண்யங்கள், உபநிடதங்கள் சார்ந்த கருத்துகளும் விளக்கங்களும் இயற்றப்பட்டன.
- இக்காலத்தில் ராமாயணமும், மகாபாரதமும் இயற்றப்பட்டதால் இது இதிகாச காலம் என்றும் அழைக்கப்படுகிறது.

- ஆரியர்கள் இந்தக் காலத்தில் தான் கங்கைச் சமவெளிப்பகுதிகளில் குடியேறினர்.
- சாம, யஜூர், அதர்வண வேதங்கள், பிராமணங்கள், உபநிடதங்கள், ஆரண்யங்கள், இராமாயணம், மகாபாரதம் போன்றவை இக்காலத்தைப் பற்றி குறிப்பிடுகின்றன.

**அரசியல் நிலை**

- முக்கிய அரசாட்சிப் பகுதியாகக் கங்கை சமவெளி அமைந்திருந்தது. இப்பகுதியில் கோசலம், விதேகம், குரு, மகதம், காசி, அவந்தி, பாஞ்சாலம் போன்ற அரசுகள் தோன்றின.
- அரச பதவி பரம்பரையானது. தனது நாட்டை எதிரிகளிடமிருந்து காத்துச் சட்டம் ஒழுங்கைப் பரானரிப்பது ராஞாவின் கடமையாக இருந்தது.
- அரசின் எல்லைகள் விரிந்ததால் அரசின் அதிகாரங்களும் அதிகரித்தன. இக்காலத்தில் வேள்விகள் அதிகரித்தன.
- இராஜசூயம், அஸ்வமேதம் போன்ற யாகங்கள் மன்னரின் பேராதிக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் செய்யப்பட்டன.
- சபா, சமிதி போன்ற அமைப்புகள் வலுவிழந்தன.
- ராஜ்ஜியம்- அரசர்களுக்கு உயர்ந்த நிலை அளிப்பது.
- அசுவமேதயாகம்: அரசன் தனது குதிரை எதிர்ப்பின்றி சென்ற இடங்களை தனது கட்டுப்பாட்டில் உள்ளது என்று உரிமை கொண்டாடுவது.
- வாஞ்பேயம்: தேர்பந்தயம்.
- அரசர்களின் பட்டப் பெயர்கள்: ஏக்ராட், சாம்ராட், சர்வபௌமா.
- கிராமங்களை நிர்வகிக்க கிராம சபைகள் இருந்தன.
- பாலி, சில்க், பாகா போன்ற வரிகள் வசூலிக்கப்பட்டன.

**பொருளாதார நிலை**

- இரும்பு அதிக அளவில் பயன்படுத்தப்பட்டது. இதனால், கைத்தொழில்கள் மேம்பட்டன. புதிய கருவிகள் தயாரிக்கப்பட்டன.
- விவசாயம் முக்கியத் தொழில், நெல், கருநிலத்திற்குச் சாண உரமிடும் முறை தோன்றியது. கம்பு, பார்லி, கோதுமை பயிரிடப்பட்டன.
- கால்நடை வளர்ப்புப் பெருகியது. ஒருவரிடம் இருந்த கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொருத்து அவரது செல்வ நிலை மதிப்பிடப்பட்டது.
- நெசவாளர்கள், தோல் தொழிலாளர்கள், தச்சர்கள், நகை செய்வோர் முதலிய தொழிலாளர்கள் இருந்தனர்.
- நிஷ்கா, சுவர்ணா, சதமானா முதலான தங்க, வெள்ளி நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன.
- கருமார் என்ற செம்பு வேலை செய்பவர்கள் போர்க்கருவிகளையும், ஆபரணங்களையும் செய்தனர்.
- இக்காலத்தில் சாதி அமைப்புமுறை தோன்றியது. இது வருண தர்மம் என்றும் அழைக்கப்பட்டது.
- யாகம் மற்றும் புரோகிதம் செய்வோர் பிராமணர்கள் எனப்பட்டனர்.
- உயிரைப் பணயம் வைத்துப் போர்புரிந்து நாட்டைக் காப்பவர்களும், ஆள்பவர்களும் சத்திரியர்கள் எனப்பட்டனர்.
- பயிர்த்தொழிலும், வாணிகமும் செய்வோர் வைசியர்கள் எனப்பட்டனர்.
- இம்மூன்று பிரிவினருக்கும் குற்றேவல் செய்வோர் சூத்திரர்கள் எனப்பட்டனர்.
- இந்த மக்கள் சாம்பல் வண்ணம் தீட்டப்பட்ட மட்பாண்டங்களை பயன்படுத்தியது. வட இந்தியாவில் நடத்தப்பட்ட அகழ்வாராச்சியில் தெரிகிறது. எனவே இப்பகுதி வண்ண மட்பாண்டப் பகுதிகள் எனப்பட்டது.
- மீன், ஆடு, மாடு இறைச்சிகளை உண்டனர்.
- சோம, சுரா பானங்கள் புழங்கப்பட்டன.
- உள்விளையாட்டுக்களாக சதுரங்கம், சூதாட்டம் போன்றவையும், வெளி விளையாட்டுக்கள் தேர்ப்பந்தயம், குதிரைப் பந்தயமும் விளையாடப்பட்டன.

- பருத்தி கம்பளி ஆடைகள் பயன்படுத்தினர்.
- தங்கம் வெள்ளி ஆபரணங்கள் அணியப்பட்டன.
- பின் வேதகால மக்கள் இரும்பு, செம்பு, தரம் போன்ற உலோகங்களையும் பயன்படுத்தினர்.

**பெண்களின் நிலை**

- பிற்பட்ட வேதகாலத்தில், பெண்களின் நிலையும் மதிப்பும் குறையத் தொடங்கின. கீழ்ப்படிந்து நடத்தல், பொது நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள அனுமதிக்கப்படவில்லை. விதவை மறுமணம் மறுப்பு என பெண்களின் நிலை சரிவை நோக்கிச் சென்றது.
- ஆண்களுக்குக் கீழ்ப்படிந்தவர்களாகவே பெண்கள் நடத்தப்பட்டார்கள். அவர்களுக்குச் சொத்துரிமை இல்லை.
- ஆளும் சபைகளில் பங்கெடுத்துக் கொள்ளும் அரசியல் உரிமைகளையும் இழந்தனர். குழந்தைத் திருமணம் பரவலாக வழக்கத்திற்கு வந்தது.
- அரச குடும்பப் பெண்கள் மட்டும் சில உரிமைகளைப் பெற்றிருந்தனர். கணவன் இறந்தால் மனைவி உடன்கட்டை ஏறும் வழக்கம் நடைமுறையில் இருந்தது.
- ஒருதார முறை வழக்கில் இருந்தபோது பலதார மணமும் நடைமுறையில் இருந்தது.
- குருகுல கல்வி முறையே இருந்தது. அது பெண்களுக்கு மறுக்கப்பட்டது. கார்கி என்ற பெண்மணி ஜனக மகராஜாவினால் கௌரவிக்கப்பட்டார்.
- மைத்ரேயி தன் கணவர் யக்ன வாக்கியருடன் நடந்த உரையாடல்கள் உபநிடதத்தில் உள்ளது.

**கல்வி**

- பிராமண மாணவர்கள், தங்கள் குருவுடன் குருகுலத்தில் தங்கிக்கல்வி கற்றனர்.

- கல்வியில் சிறந்து விளங்கிய கார்கி, மைத்ரேயி போன்ற பெண்களும் இருந்தனர்.
- குருகுலங்களில் மாணவர்கள் தத்துவம், தர்க்கசாஸ்திரம், சமயம், இலக்கணம், வானவியல், மருத்துவம், ஒழுக்கவியல், கணிதம், வேதங்கள், உபநிடதங்கள், இலக்கண நியதி போன்ற பாடங்களைப் பயின்றனர்.

**சமயம்**

- தந்தை குடும்பத்தின் தலைவர். கூட்டுக்குடும்பம் அதிகமாக இருந்தது.
- வருண முறைப்படி பிராமண குருமார்களால் சமயத்துறையில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன.
- முற்பட்ட வேதகாலக் கடவுள்களின் முக்கியத்துவம் குறைந்தது. இக்காலத்தில் பிரம்மன், விஷ்ணு, ருத்ரன்(சிவன்) ஆகியோர் முக்கியத்துவம் பெற்றனர்.
- உயிர்ப்பலியிடுதலும், கடவுளை வணங்கும் வழிபாட்டு முறைகளும் முக்கியத்துவம் பெற்றன. வழிபாட்டில் யாகங்களும், சடங்குகளும் அதிகரித்தன.
- மக்கள் ஆன்மா, வினைப்பயன் , மோட்சம் போன்றவற்றில் நம்பிக்கை கொண்டிருந்தனர். கர்மா கொள்கையும், அவதாரக் கொள்கையும் ஏற்கப்பட்டன.
- கடவுள் ஆக்கல் அழித்தல் இரண்டும் செய்வார் என்று நம்பினர்.
- இக்காலத்தின் இறுதியில் புரோகிதர்களின் ஆதிக்கத்துக்கும், யாகம், உயிர்ப்பலி போன்ற சடங்குகளுக்கும் கடுமையான எதிர்ப்புகள் தோன்றின. இத்தகைய காரண காரியத்திற்குப் பொருந்தாத சடங்குகளுக்கும், யாகங்களில் நாட்டின் வளம் வீணடிக்கப்படுவதற்கும் எதிராகத் தோன்றியவையே உயிர்களைக் காத்திடும் உணர்வை வளர்த்த சமண பௌத்த சமயங்கள் எனலாம்.

**ஆசிரமம் என்பது தனி மனிதனின் நான்கு வாழ்க்கை முறைகள்**

1. பிரும்மச்சரியம் அல்லது மாணவப்பருவம்

2. கிருகஸ்தம் - வீட்டுத்தலைவன், கணவன்

3. வனப்பிரசாதம் - காட்டில் வசிக்கும் துறவு நிலை

4. சன்னியாசம் - முற்றும் துறந்த நிலை

**திராவிட நாகரிகக் கூறுகள்**

- இருண்ட நிறமும், நடுத்தரமான உயரமும், கருமையான தலைமுடியும் உடையவர்கள்.
- முதன்மைத் தொழில், பயிர்த்தொழில், வாணிகம்.
- முக்கிய விலங்கு எருது. எருதுகளை வழிபட்டனர்.
- வழிபாடு, கோயில் வழிபாடு, சிலை, லிங்கம், சூலம், சக்தி, நாகம்
- செம்பு உலோகத்தைப் பயன்படுத்தினர். இரும்பை அறிய முடியவில்லை.

**ஆரிய நாகரிகக் கூறுகள்**

- வெள்ளை நிறமும் உயரமான உருவமும், செம்பட்டையான முடியும் உடையவர்கள்.
- முதன்மைத் தொழில் கால்நடை வளர்ப்பும், போர் புரிதலும்.
- கம்பளி, பருத்தி மற்றும் விலங்குகளின் தோலை உடுத்தினர்.
- முக்கிய விலங்கு பசு. பசுக்களை வழிபட்டனர்.
- களிமண் மற்றும் மூங்கிலள் கொண்ட வீடுகளை அமைத்தனர்.
- வழிபாடு: யாகம் செய்தல், சிலைகளும் கோயில்களும் இல்லை; இந்திரன் அக்னி, வருணன்.
- புலியை அறியார்; குதிரைகளைப் பயன்படுத்தினர்.
- கால்நடை வளர்ப்பு நாகரிகம், கிராமங்கள்.

## 4. தமிழ்நாட்டில் சங்ககாலம்

- விந்திய மலைக்கு தெற்கிலுள்ள பகுதி, உலகிலேயே மிகமிகத் தொன்மையானது என்று வரலாற்று அறிஞர் கூறுவர்.
- இந்தத் தென்னாட்டில் , தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய மொழிகளைப் பேசும் மக்கள் வாழும் மாநிலங்கள் உள்ளன. அவற்றுள் திருப்பதி மலைக்குத் தெற்கில் வாழும் மக்கள் பேசும் மொழி 'தமிழ்'.
- ஆங்கிலேயர் ஆட்சியில் தென்னாட்டின் பெரும்பகுதி "சென்னை மாகாணம்" என்று அழைக்கப்பட்டது.
- நாடு சுதந்திரம் பெற்றபின் தமிழ்மொழி பேசப்படும் மாநிலம் தனியாகப் பிரிக்கப்பட்டது. அதற்கு 1967 ம் ஆண்டில் முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்களால் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப்பட்டது.
- தமிழ்நாடு, மூவேந்தர் எனப்பட்ட சேர, சோழ, பாண்டியர் மரபுவழியினரான மாமன்னர்களால், பண்டைக்காலம் முதல் ஆளப்பட்டு வந்தது. தென்னாட்டில் தென் பகுதியைப் பாண்டியர்களும், மேற்குப் பகுதியைச் சேரர்களும், வடகிழக்குப் பகுதியைச் சோழர்களும் ஆண்டு வந்துள்ளனர்.

**வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம்**

வரலாற்றுக் காலத்திற்கு முன்னர் குமரி முனைக்குத்தெற்கே உள்ள இந்துமாக்கடல் பகுதி ஒரு பெருநிலப் பரப்பாக இருந்தது. அதைக் குமரிக்கண்டம் என்பர்.

- தென்னாட்டைப் போன்று எட்டு, பத்து மடங்கு பெரிய அந்நிலப் பரப்பில், பஃறுளியாறு ஓடியது, பன்மலை அடுக்கம் நீண்டிருந்தது. மழைவளம் பெருகி, பெருங்காடுகள் வளர்ந்து, மக்களின் நாகரிகமும் சிறந்து நல்லதோர் அரசும் நடைபெற்றிருக்க வேண்டும் என்பர். அதுவே பண்டை அரசரான பாண்டியர் அரசு ஆக இருத்தல் கூடும்.

**தமிழ்நாட்டில் சங்ககாலம் (கி.மு. 300 - கி.பி.300)**

- தமிழ் மொழியையும், தமிழ் இலக்கணத்தையும் சங்கம் எனப்படும் புலவர் குழுமம் மூலம் வளர்த்தனர்.

**மூன்று சங்கங்கள்**

- அக்காலத்தில் பாண்டியர் தலைநகர் 'தென்மதுரை'. அங்குத் தமிழ் வளர்த்த தலைச்சங்கம் கூடியது.
- பின்னர் நிகழ்ந்த கடற்கோளால், தென்மதுரை உள்ளிட்ட பெருநிலப்பகுதி கடலில் மூழ்கியதால், நீரில் மூழ்காத நிலப்பரப்பில் கபாடபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய அரசு நடைபெற்றது.
- அந்நகரில் தமிழ் வளர்த்த புலவர்கள் கூடும் இடைச்சங்கம் நடைபெற்றது. அந்தத் தலைநகரும் பின்னர் கடற்கோளுக்கு இரையானது.
- பாண்டியர் மதுரை மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்தினர்.
- மதுரை மூதூரில் தமிழ் வளர்த்த புலவர்களின் கடைச்சங்கம் நடைபெற்றது. இங்குப் பாண்டிய மன்னர் தலைமையில் புலவர்கள் கூடித் தமிழ் ஆய்வு நடத்திய சிறப்பால் 'கூடல்' என்றும் பெயர் பெறுவதாயிற்று.
- தமிழ்மொழியின் வளத்தைப் பெருக்கும் இலக்கியம் வளர்த்த தலை, இடை, கடைச் சங்கங்கள் மூன்றும் தலைமுறை பலவாகப் பாண்டியர் தலைமையில் நடைபெற்றது.

**லெமூரியாக் கண்டம்**

- கடற்கோளால் மூழ்கிப்போன குமரிக்கண்டத்தில்தான், பல்லுயிர்களும் பெருகுதற்கேற்ற தட்பவெப்பச் சூழல் நிலவியது. அதனால் பரிணாம வளர்ச்சி முறையில், அங்குதான் முதல் மனித இனம் தோன்றியிருக்க வேண்டும். அந்த மாந்தர் பேசிய முதல்மொழியே, தமிழின் மூலமொழி ஆகும். அந்த இனமே

தமிழ் இனமாக உருக்கொண்ட தொன்மக்கள் ஆவார் என ஆய்வாளர் தெரிவிக்கின்றனர்.

- குமரிக் கண்டத்திற்கு முன்னதாக அப்பகுதியை உள்ளடக்கிய ஒருபெரும் கண்டம்,ஆப்பிரிக்காவையும், ஆஸ்திரேலியாவையும் இணைக்குமாறு நிலவியதென்றும், அந்தக் கண்டத்தில் வாழ்ந்த 'லெமூர்' என்னும் குரங்கினத்தின் பெயரால் அக்கண்டம் 'லெமூரியா' என்றும் பெயர் பெற்றது என்றும், அங்குத் தோன்றிய மனிதக் குரங்கே முதல் மனிதன் பிறக்கக் காரணம் என்றும் கருதுகின்ற ஆய்வாளரும் உள்ளனர். எவ்வாறாயினும் முதல் மனித இனம் குமரிக்குத் தெற்கே இருந்த கண்டத்தில்தான் தோன்றியது.

**வரலாற்றுக் காலம்:**

- தமிழ்நாட்டைக் குறித்து அறியக்கூடிய வரலாற்றுக் காலம் சங்க காலத்தில் தொடங்குகிறது.
- சங்க காலம் என்பது கடைச்சங்கத்தில் புலவர்கள் அவ்வப்போது கூடித் தமிழ் ஆய்வு செய்த காலமாகும். அது தி.மு. ஆண்டு 200 முதல் தி.பி. ஆண்டு 200 வரை 400 ஆண்டுக் காலமாகும். அது தி.மு. 300 முதல் தி.பி. 300 வரை என்று கொள்வோரும் உண்டு. (தி.மு. - தி.பி. என்பது திருவள்ளுவரின் பிறப்பாண்டான கி.மு. 31 ஆம் ஆண்டை மையமாகக் கொண்டு கணக்கிடுவதாகும்).
- தமிழறிஞர்களின் முடிவின்படி, கிறித்து பிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன்னர் திருவள்ளுவர் பிறந்தார் என்று கொண்டு, காலத்தைக் கணக்கிடுவதைத் தமிழக அரசும் ஏற்று அறிவித்துள்ளது.
- சங்க இலக்கியம் எனக் கிடைத்துள்ள நூல்கள் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் ஆகும். அவற்றின் மூலம் தமிழ் மக்களின் நாகரிகம், பழக்கவழக்கம், பண்பாடு, ஆட்சிமுறை முதலானவற்றை நாம் அறிந்து கொள்ளலாம்.

- கடைச்சங்க காலத்திற்கு முன்னரே தமிழின் பெருமைக்கு அடையாளமாக அரும்பெரும் இலக்கணமான தொல்காப்பியம் தோன்றியுள்ளது. அதனால், அதற்கும் சிலபல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழில் இலக்கியம் வளர்ந்திருக்க வேண்டும் என்பர். சங்க காலத்திலேயே அனைத்துச் சமயத்தாரும் வியந்து போற்றும் 'திருக்குறள்' தோன்றி இருக்கிறது என்பது தமிழுக்குத் தனிப் பெருமையாகும்.
- "வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று முழங்கியுள்ளார்.
- நமது தாய்மொழி தமிழ் இலக்கண வரம்பு கொண்டு வளர்ந்த தன்மையால், 'செந்தமிழ்' என்றும் வழங்கப்பட்டது. பிறமொழிகளின் துணை தேவையின்றியே 'தமிழ்' வளரும் திறன் பெற்றிருப்பதால் தமிழை 'உயர்தனிச் செம்மொழி' என்று அறிஞர்கள் குறிப்பிடுவர்.
- மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்ட தென்னகத்தில் வாழ்ந்த தமிழர்கள் சங்க காலத்திற்கு முன்னிருந்தே 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்பதற்கேற்ப, கடல் வாணிபத்தில் சிறந்திருந்தனர்.
- நாவாய், கல, கப்பல், தோணி, ஓடம், படகு, தெப்பம், கட்டுமரம் முதலான ஏராளமான சொற்கள் கடலில் செல்லும் கலங்களைச் சுட்டும் பெயராக உள்ளது.
- 'புகார்' என்னும் காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, முசிறி, தொண்டி, வஞ்சி முதலான பல துறைமுகங்கள் இருந்தன. மேற்கிலும், கிழக்கிலுமிருந்த எகிப்து, யவனம், ரோம், சீனம் முதலான பல நாடுகளுடன் தமிழ்நாடு பண்டமாற்று வணிகம் செய்து வந்தது.
- வடபுலத்தில் சிந்து சமவெளியில் அகழ்ந்து காணப்பட்ட மொகன் - சா- தாரோ, ஹரப்பா முதலான (பழைய) நகர நாகரிகச் சின்னங்களாகக் கண்டெடுக்கப்பட்டன. அந்தப் பல்லாயிரக்கணக்கான பொருட்களை ஆய்வு செய்தனர். நான்கு, ஐந்து ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே அங்கு நிலவிய

நகரமைப்பு, நாகரிகம், தென்னகத் தமிழ் மக்களின் நாகரிகத் தொடர்புடையதாக உள்ளது.

- பழந்தமிழர்கள் தென்னாட்டில் மட்டுமின்றி வடநாட்டிலும் பரவலாக வாழ்ந்துள்ளனர்.
- சங்க காலத்தில் தமிழ்ப்புலவர்கள் நிலத்தை 5 இயற்கைப் பிரிவாகப் பிரித்து வழங்கினர். மலைகளும் அது சார்ந்த நிலமும் குறிஞ்சி எனப்பட்டது. காடுகளும் அது சார்ந்த நிலமும் முல்லை எனவும், கடலும் கடற்கரைப் பகுதியும் நெய்தல் எனப்பட்டது. நீர் வளத்துடன் வயல் சூழ்ந்த பகுதி மருதம் எனப்பட்டது. கடும் வறட்சிக்கு உள்ளாகித் திரிந்த நிலத்தைப் பாலை என வழங்கினர்.
- அந்தந்த நிலத்தில் வழ்ந்த மக்கள் அந்தந்த நிலத்தில் செய்யக்கூடிய தொழிலைச் செய்தனர். அக்காலத்தில் வாழ்ந்த மன்னர்கள், குடிமக்களைக் காப்பதைத் தமது உயிரினும் மேலான கடமையாகக் கொண்டிருந்தனர்.
- அவர்களின்றியும் நாட்டில் பல குறுநில மன்னர்களும், வள்ளல்களும், சிறுசிறு பகுதிகளை ஆண்டிருந்தனர்.
- உழவுத் தொழில், உலகோர்க்கு உணவளிக்கும் உயர்ந்த தொழிலாக மதிக்கப்பட்டது. அதற்கடுத்த நிலையில் நெசவுத் தொழில் மதிக்கப்பட்டது.

**மூவேந்தர்கள்:**

**சேரர்**

- சேரர் மரபில் வந்தவருள், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சிலம்பு புகழ் சேரன் செங்குட்டுவன் முதலானோர் புகழ் ஓங்கியவர்கள். அவ்விருவருமே வடக்கில் இமயம் வரை சென்று (இமயவரம்பன்) வெற்றிக்கொடி நாட்டியவர்கள்.
- தற்போதைய கேரளா மற்றும் தமிழகத்தின் மேற்குப்பகுதிகள் சேரநாடு என்று அழைக்கப்பட்டது. தலைநகர் வஞ்சி.

- சேரமன்னர்களில் சிறந்தவர் செங்குட்டுவன்.
- சேரர்களின் சின்னம் வில்.
- முக்கிய துறைமுகங்கள் தொண்டி, முசிறி.

**சோழர்கள்**

- சோழநாடு திருச்சி, தஞ்சை பகுதிகளை கொண்டது.
- பண்டைய சோழர்களில் சிறந்தவன் கரிகாலன்.
- தலைநகர் உறையூர், துறைமுகம் காவிரிப்பட்டினம், சின்னம் புலி.
- சோழமரபில் வந்தவர்களும் - கரிகாற் பெருவளத்தான், கிள்ளிவளவன் ஆகியோர் புகழ்மிக்கவர்.
- 2000 ஆண்டுகட்கு முற்பட்ட சோழமன்னன் கரிகாலன், அவன் தனது ஆட்சிக் காலத்தில், ஈழத்தை வென்று, அந்நாட்டவரைக் கைதிகளாகக் கொண்டு வந்து, அவர்களைக் கொண்டு காவிரி நதிக்குக் கரை கட்டினான்.
- காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணை கட்டியது கரிகால சோழன். இவர் கரிகால் பெருவளத்தான் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளார்.
- இடைக்காலத்தில் வாழ்ந்த இராசராசசோழன், இராசேந்திரசோழன் ஆகியோரும் பெரும்புகழ் பெற்றவர். அவர்கள் வடபுலத்தை மட்டுமின்றி ஜாவகம், கடாரம் முதலான கீழ்த்திசை நாடுகளையும் வென்றதாக வரலாறு கூறுகிறது.
- குறுநில மன்னராக விளங்கிய எழுவர், கடையெழு வள்ளல்கள் என்னப்பட்டனர். பாரி, ஓரி, காரி, நள்ளி, எழினி, பேகன், ஆய் ஆகியோர்.

**பாண்டியர்கள்**

- தமிழகத்தின் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய பகுதிகளைக் கொண்டது.
- மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டியர்களுக்கு துறைமுகம் கொற்கை ஆகும்.

- சிறந்த மன்னர் நெடுஞ்செழியன். இவர் சேர சோழ மற்றும் குறுநில மன்னர்களையும், தலியாணங்கானம் என்னுமிடத்தில் தோற்கடித்தார். எனவே தலையாணங்கானத்தில் செறுவென்ற நெடுஞ்செழியன் என்று சிறப்பிக்கப்பட்டார்.
- மதுரைக் காஞ்சி என்ற நூல் நெடுஞ்செழியன் பற்றியும் மதுரையைப் பற்றியும் கூறுகிறது.

**சமூகம்**

- ஆற்றுப்படை என்ற நூல்கள் அரசர்கள், நிலப்பிரசுர்கள் ஆகியோர் புலவர்களையும், அறிஞர்களையும் ஆதரித்த முறை பற்றி விளக்கமாக கூறுகின்றன.
- போர்க்களத்தில் உயிர்நீத்த வீரர்களை கௌரவிக்கும் வகையில் வீரக்கல் நடும் பழக்கம் இருந்தது.
- தமிழர்களின் வீரம் பற்றி கூறும் நூல் புறநானூறு.

**மக்கள் வாழ்க்கை:**

- செய்யும் தொழிலின் காரணமாக வேறுபாடு தோன்றியது. குலங்கள் பலதோன்றின. அவர்தம் நடைமுறை வாழ்வில் ஏற்றத்தாழ்வுகளும் இருந்தன. ஆயினும் வருணாசிரம அடிப்படையில், பிறப்பினாலேயே வேற்றுமை பாராட்டும் நிலை அக்காலத்தில் இடம்பெறவில்லை.
- தீண்டாமை நடைமுறையில் பின்பற்றப்பட்டதாகக் கருதச் சிறிதும் இடமில்லை. காலப்போக்கில் தமிழ் மக்களிடம் திணிக்கப்பட்டதொரு வழக்கமே 'சாதிவழிப்பட்ட' உயர்வும், தாழ்வும், தீண்டாமை இழிவும் ஆகும்.
- சங்க காலச் சமுதாயத்தில் பெண்கள் உரிமை கொண்டவராக இருந்ததால், 'காதல்' அடிப்படையில் மணவாழ்க்கை அமைந்தது. காதலர் இருவர் கருத்தொருமித்து இல்லறத்தில் ஈடுபட்டதைப் பெற்றோரும் ஏற்றனர்.

- புரோகிதர்கள் நடத்தும் சடங்குகளும், வேள்வித்தீ வளர்த்தலும், வடமொழி மந்திரமும் இடம்பெறவில்லை.
- அக்காலத்தில் மகளிரும் உரிமையுள்ள வாழ்வு நடத்தும் வாய்ப்பு இருந்தது.
- வைதிக முறையில் பின்பற்றப்பட்டதைப்போல், மகளிர் தகுதியற்றவர்கள் என்று உரிமை மறுக்கப்பட்டவர்களாக இல்லை.
- திருக்கோவில்கள் கட்டும் முறை வளராத அக்காலத்தில், சங்ககால மக்கள் போரில் ஈடுபட்டு வீரமரணம் அடைந்தவர்களின் நடுக்கல்லையும், தமது முன்னோர்களையும் வழிபட்டு வந்தனர்.
- அறுவடை விழா, பொங்கல் விழா, இளவேனில் பருவவிழா போன்ற விழக்களை கொண்டாடினர்.
- தலைநகர்களில் இந்திர விழாவும் கொண்டாடப்பட்டது. பிற்காலத்தில் புராணங்களின் வழியாகப் பரவிய பல பண்டிகைகளை அக்கால மக்கள் அறிந்திருக்கவில்லை.

## 5. சமணமும் பௌத்தமும்

- கி.மு. 6 ம் நூற்றாண்டில் பாரசீகத்தில் ஜொராஸ்டரும், சீனாவில் கன்பூசியசும் புதிய கருத்துக்களை போதித்தனர்.
- கி.மு. 6 ம் நூற்றாண்டுகளில் சிந்து சமவெளிப் பகுதியில் 62 சமயப் பிரிவுகள் இருந்தன.
- கி.மு. 6 ம் நூற்றாண்டு உலகின் சிந்தனைப் புரட்சிக் காலமாகும். அக்காலத்தில்தான் இந்தியாவில் சமண மதமும் பௌத்த மதமும் தோன்றின. இவ்விரு மதங்களும் சமய, சமூகச் சீர்திருத்த இயக்கங்களாக உருவெடுத்தன. இவை மூடநம்பிக்கைகள், தேவையற்ற சமயச் சடங்குகள் மற்றும் சாதிய ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவதை நோக்கங்களாகக் கொண்டிருந்தன.
- சமண மதத்தை உருவக்கியவர் வர்த்தமான மகாவீரர். பௌத்த மதக் கருத்துகளை வழங்கியவர் கௌதம புத்தர்.

**சமன புத்த சமயங்கள் தோன்ற காரணமாக இருந்தவை**

1. சடங்குகள், வேள்விகள், கடவுள் வழிபாட்டை சிக்கலாக்கின.

2. சடங்குச் செலவுகள் அதிகமாயின.

3. கடுமையான சாதி முறை ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கியது.

4. பாலி மொழி பேசும் மக்களால் சமஸ்கிருத சமய இலக்கியங்களை புரிந்து கொள்ள முடியவில்லை.

5. சமயக்குரவர்களின் ஆதிக்கம்.

6. மக்கள் விரும்பாத உயிர்பலிகள்.

**சமணம்**

- கி.மு. 6 ம் நூற்றாண்டில் தோன்றிய இந்த சமயம் வேத சமயத்தையும் சடங்குகளையும் ஒதுக்கியது.
- சமண மதத்தினரால் 24 தீர்த்தங்கரர்கள் வழிபடப்படுகின்றனர்.
- முதல் தீர்த்தங்கரர் ஆதிநாதர் எனப்படும் ரிஷபதேவர் ஆவார்.
- இவ்வரிசையில் இறுதியாக 24 ஆவதாக வந்தவர் வர்த்தமான மகாவீரர். இவர் சமண மதத்துக்கு உறுதியான ஓர் அமைப்பைத் தந்தார்.
- தீர்த்தங்கரர் என்றால் மதபோதகர் என்று பொருள்படும்

**மகாவீரர்**

- வர்த்தமான மகாவீரரின் காலம் கி.மு. 534 ம்தல் கி.மு. 462 வரை.
- இன்றைய பீகார் மாநிலத்தில், வைசாலி நகருக்கு அருகிலுள்ள குந்தக்கிராமம் என்னும் ஊரில் பிறந்தார்.

- இவரது தந்தை பெயர் சித்தார்த்தர். தாயின் பெயர் திரிசலை (லிச்சாவி மரபைச் சார்ந்த திரிசலா வைசாலி அரசின் சகோதரி). இவருக்கு யசோதா என்ற மனைவியும், அனோஜா பிரியதர்சனா என்ற மகளும் இருந்தனர்.
- வர்த்தமானர் தனது 30ஆம் வயதில் இல்வாழ்க்கையைப் புறந்தள்ளி முற்றிலும் ஒதுக்கிவிட்டுத் துறவியானார். அன்றைய காலக்கட்டதில் நிலவிய பல்வேறு பிரச்சனைகளுக்கு விடைதேடி 12 ஆண்டுகள் கடுமையான தியானத்தில் ஆழ்ந்து 42 வயதில் கைவல்யா என்று அழைக்கப்பட்ட ஆன்மீக அறிவு பெற்றார்.
- தம் வாழ்க்கையில் இன்பங்களையும், துன்பங்களையும் சமமாகப் பாவிக்கத் தொடங்கினார். உண்மையைத் தேடி வெற்றியும் கண்டார். இதன் காரணமாக வெற்றியாளர் என்பதைக் ஜீனர் என்ற சொல்லால் அழைக்கப்பட்டார்.
- மக்கள் அவரை மகாவீரர் என்றும் அழைத்தனர். தான் கண்ட உண்மைகளை ஊர் ஊராகச் சென்று 30 ஆண்டுகள் பிரச்சாரம் செய்தார்.
- மனிதர்களுக்குப் பிறப்பு, இறப்பு ஏன் ஏற்படுகின்றன? அவர்களுக்குத் துன்பங்கள் எதனால் ஏற்படுகின்றன? என்ற கேள்விகள் மகாவீரரின் மனத்தில் தோன்றின. மனிதர்கள், ஒருவரை ஒருவர் ஏன் துன்புறுத்த வேண்டும்? ஏன் ஏமாற்றுகிறார்கள் என்ற சிந்தனைகள் அவருக்குள் எழுந்தன. ஒருவேளை, முற்பிறவியில் செய்த பாவமாக இருக்கலாம் என்று ஒரு பிரிவினர் கூறினர்.
- கோசலம், மகதம், மிதிலை, சம்பா ஆகிய இடங்களில் தனது சமயத்தை பரப்பி ராஜகிரிக்கு அருகில் உள்ள பவபுரி என்னுமிடத்தில் தனது 72 வது வயதில் மரணமடைந்தார்.

**வர்த்தமானர் போதித்த மும்மணிகள்(போதனைகள்)**

1. நல்லறிவு
2. நன்னம்பிக்கை

3. நன்னடத்தை

இவை திரிரத்தினங்கள்(மூன்று ரத்தினங்கள்) என்று அழைக்கப்பட்டன.

**ஐந்து ஒழுக்கங்கள் / கொள்கைகள்:**

1. அகிம்சை / ஊறு செய்யாமை - தீங்கு செய்யாமை.
2. சத்யம் / பொய்யாமை - உண்மையே பேசுதல்.
3. அஸ்தேயம் / களவாமை - திருடாமை.
4. தியாகம் / உடைமை மறுத்தல் - எல்லா செல்வத்தையும் துறத்தல்.
5. பிரம்மச்சரியம் / புலனடக்கம் - தூய வாழ்க்கை.

**போதனைகள்**

- கடவுள் என்று ஒருவர் இருப்பதை நம்பவில்லை.
- மனிதனின் ஆத்ம ஒளியே கடவுள் என்று கருதினர்.
- மனிதர்களின் துயரத்துக்கு மனிதர்கள்தான் காரணம். மனிதர்களால் பிற உயிரிகளுக்கும் ஆபத்து ஏற்படக்கூடாது என்றார். இதற்காகக் கட்டுப்பாடுகளுடன் கூடிய வாழ்க்கை முறையைப் போதித்தார்.
- தமது கருத்துகளைப் பின்பற்றுபவர்களும் இந்தக் கட்டுப்பாட்டு நெறிகளைப் பின்பற்ற வேண்டும் என்றார். இது 'கொல்லாமைக் கொள்கை' என்று அழைக்கப்பட்டது. இதை ஏற்ற சமணர்கள் தம் உடலை வருத்தி, உணவு, நீர் எதுவும் அருந்தாமல் மனத்தை ஒரு நிலைப்படுத்தினர்.
- சமண சமயம் உயிரிரக்கம் எனப்படும் அகிம்சையை மிகவும் வலியுறுத்தியது. பிற உயிர்களுக்கு ஊறு செய்யக் கூடாது.
- ஆடைகள் அணிவதையும் போரிடுவதையும், வேளாண்மை செய்வதையும் தவிர்த்தனர்.

- உயிர்களை எதன் பொருட்டும் கொல்லக்கூடாது என்பது இச்சமயத்தின் அடிப்படைக் கோட்பாடாகும்.
- சமணர்களின் முக்கியத் தொழில் வணிகம்.
- தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என போதிக்கப்பட்டது.
- அகிம்சையை போதித்த மகாவீரர் அனைத்து பொருட்களுக்கும் உயிர் உண்டு என்றார்.
- கர்மா என்ற தத்துவத்தை நம்பிய இவர் மேலான அறிவினைப் பெறுவதுதான் மிக உயர்ந்த நோக்கம் என்றார்.
- சங்கங்களை அமைத்தார். அதில் ஆண்களும் பெண்களும் இருந்தனர்.
- மகாவீரரை பினபற்றியவர்கள் திகம்பரர் என்றும் (ஆடைகளை துறந்தவர்), ஸ்வேதாம்பரர்(வெள்ளை ஆடை உடுத்தியவர்) என்றும் இருந்தனர்.
- இவர் தனது சமயக் கருத்துக்களை பிராக்கிருத மொழியில் பரப்பினார்.
- பாலி, பிராக்கிருதம், தமிழ் ஆகிய மொழி வளர்ச்சிக்கு சமணம் உதவியது.
- குஜராத்தின் வரலாறு எழுதிய ஹேமச்சந்திரர் சமண சமயத்தவர்.
- ஹேமச்சந்திரர் இரு அகராதிகளை இணைத்து பிராகிருத இலக்கண நூலையும், யோக சூத்திரம் என்ற மற்றொரு நூலையும் எழுதியுள்ளார்.
- அங்கங்கள், பூர்வங்கள் ஆகிய நூல்கள் சமணர்களின் புனித நூல்கள்.
- ரனக்பூர் சமணர்களின் ஐந்து புனிதத் தலங்களில் ஒன்று.
- தீவிர அகிம்சையை பெரும்பாலும் பின்பற்ற இயலவில்லை.
- சமய மூடநம்பிக்கைகளும், சண்டை சச்சரவுகளும் அக்காலத்தில் நிலவியதால் அவற்றை நீக்கிய சமணக் கொள்கைகள் விரைவாகப் பரவின.

**சமண சமயத்தைப் பின்பற்றிய அரசர்கள்:**

- சந்திரகுப்த மௌரியர், கலிங்கத்துக் காரவேலன், கூன்பாண்டியன், முதலாம் மகேந்திரவர்ம பல்லவர்.

- பிம்பிசாரர், அஜாதசத்ரு போன்ற வட இந்திய மன்னர்கள் சமண சமயத்திற்கு ஆதரவு அளித்தனர்.

**சமணர்களின் தமிழ் இலக்கிய, இலக்கணப் படைப்புகள்:**

- சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி (திருத்தக்க தேவர்), வளையாபதி, சூளாமணி முதலிய காப்பியங்களையும், யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலவிருத்தி, நேமிநாதம், நன்னூல்(பவநந்தி முனிவர்), அகப்பொருள் விளக்கம், இலக்கண விளக்கம் போன்ற இலக்கண நூல்களையும், நிகண்டுகளையும், நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி, திணைமாலை நூற்றைம்பது முதலிய அற நூல்களையும், இயற்றிச் சமணர்கள் தமிழுக்குத் தொண்டாற்றியுள்ளனர்.

**சமணக் கட்டடக் கலை**

- இராஜஸ்தான் - மவுண்ட் அபு - தில்வாரா கோயில்
- கஜுராஹோ, சித்தூர், தனக்பூர் - சமணர் கோயில்கள்

**சிற்பங்கள்**

- உதயகிரி, ஹதிகும்பா, எல்லோரா, கிர்னார், கழுகுமலை மைசூருக்கு அருகிலுள்ள சரவணபெலகொலா என்ற இடத்தில் அமைந்துள்ள கோமதீஸ்வரர் சிலை.

**பௌத்த மதம்**

**புத்தர்**

- பௌத்த மதத்தைத் தோற்றுவித்தவர் சித்தார்த்தர் எனும் இயற்பெயர் கொண்ட கௌதமபுத்தர் ஆவார்.
- இவர் வாழ்ந்த காலம் கி.மு. முதல் கி.மு. வரையாகும். இன்றைய நேபாள நாட்டில் உள்ள கபிலவஸ்து என்னும் ஊரில் பிறந்தார்.

- இவரது தந்தை சாக்கியக் குலத்தைச் சேர்ந்த சுத்தோதனர், தாய் மாயாதேவி.
- சித்தார்த்தர் பிறந்த ஏழாவது நாளில் அவரது தாய் இறந்துவிட்டார். பின்னர், சித்தார்த்தர் பிறந்த தன் சிற்றன்னை மகா பிரஜாபதி கௌதமியால் வளர்க்கப்பட்டதால் கௌதம புத்தர் என்று அழைக்கப்பட்டார்.
- தனது வது வயதில் யசோதரையை மணந்தார். இராகுலன் என்ற ஆண் மகவைப் பெற்றார்.
- சிறுவயது முதலே உலக நடப்புகள் குறித்து அறிந்து கொள்வதில் ஆர்வம் உள்ளவராக இருந்தார்.
- வேட்டையாடுதல், வீண் ஆடம்பரம் ஆகியவற்றில் அவருக்குச் சிறிதும் நாட்டம் இல்லை.
- வயதான மனிதன், நோயாளி, பிச்சைக்காரன், மரண ஊர்வலம் ஆகிய இந்த நான்கு காட்சிகள் அவர் மனத்தில் பல கேள்விகளை எழுப்பின.
- தனது 29 வயதில் மனைவி, மகன், தாய்-தந்தை என அனைத்து உறவுகளையும் துறந்தார். முதலில் அரதகலமா என்பவரிடம் சீடராக இருந்தார். பின் ருத்ரகா என்பவரிடம் உபதேசம் பெற்றார்.
- காட்டிற்குச் சென்று தவம் செய்தார். கயை என்ற இடத்தில் ஞானம் பெற்று புத்தர் என்றும் சாக்கியமுனி என்றும் அழைக்கப்பட்டார்.
- பசி, தாகம் அனைத்தையும் அடக்கினார். ஆனால், அவரது வினாக்களுக்கு விடை கிடைக்கவில்லை. மனம் தெளிவுபெறாமல், தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்வதை நிறுத்தினார்; உணவு உல்கொள்ளத் தொடங்கினார்; ஆழ்ந்து சிந்தித்தார்; உண்மை விளக்கம் பெற்றார்.
- ‘அறிவுணர்வு’ பெற்ற சித்தார்த்தர் ‘புத்தர்’ ஆனார். அவர் ‘அறிவுணர்வு’ பெற்ற இடம், கயவில் உள்ள அரசமரத்தடியாகும்.
- ‘புத்தர்’ என்ற சொல்லின் பொருள் ‘புத்தியை வென்றவர்’ ‘நல்லது எது, கெட்டது எது, என்பதை அறிந்து கொண்டவர்’ என்பது ஆகும்.

- புத்தர் தனது முதல்போதனையை உத்தரப் பிரதேசத்தில் வாரணாசியின் அருகே சாரநாத்தில் உள்ள மான்பூங்காவில் தொடங்கினார்.
- கி.மு. 481 ல் உத்திரப்பிரதேசத்திலுள்ள குசி நகரம் என்னும் இடத்தில் இறந்தார்.

**புத்தரின் கோட்பாடுகள்**

- வாழ்க்கை துன்பமயமானது; ஆனால், அத்துன்பம் விதியினாலோ, முற்பிறப்பின் வினையாலோ வருவதில்லை. துன்பங்களுக்கு வேறு காரணங்கள் உண்டு. அவற்றை அகற்றினால், துன்பங்களிலிருந்து விடுபட முடியும்.
- பேராசை கொள்ளாமை, பொய் பேசாதிருத்தல், பிறரைத் துன்புறுத்தாமை ஆகிய நெறிகளைப் பின்பற்றவேண்டும். ஆழ்ந்து சிந்தித்தல், நல்ல சொற்களைப் பேசுதல், தேவைகளை மட்டும் நிறைவேற்றிக் கொள்ளுதல் போன்ற நெறிகளைப் பின்பற்றினால் துன்பம் நேராது என்றார்.
- சாதிப் பாகுபாடுகளை அவர் ஏற்கவில்லை. கடவுள், ஆன்மா, விதி என்று எண்ணி மனிதர்கள் பயப்பட வேண்டாம். சொந்த எண்ணங்களையும், அறிவையும் நம்பி வாழவேண்டும். மனிதர்கள், விலங்குகள், பறவைகள் என அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு கொள்ள வேண்டும் என்றார்.
- துன்பங்களைப்பற்றிப் புத்தர் கூறிய அறிவுரைகள், 'நான்கு பேருண்மைகள்' என்று, ஒழுக்க நெறிகள் பற்றி அவர் போதித்தவை 'எண்வகை நெறிகள்' என்றும் அழைக்கப்படுகின்றன.

**நான்கு பேருண்மைகள்**

1. உலகம் துன்பமும் துயரமும் நிறைந்தது
2. துன்பத்திற்குக் காரணம் ஆசையே.

3. ஆசையை ஒழித்தால் துன்பத்திலிருந்து விடுபடலாம்

4. ஆசையை ஒழிக்க எட்டு நெறிகள் / அட்டமார்க்கம் என்னும் வழி துயரங்களிலிருந்து விடுவிக்கும்.

**ஆசையை ஒழிப்பதற்கான எட்டு நெறிகள்**

| | |
|---|---|
| 1. நல்ல நம்பிக்கை | 2. நல்ல பேச்சு |
| 3. நல்ல வாழும் வழி | 4. நல்ல சிந்தனை |
| 5. நல்ல முயற்சி | 6. நல்ல நடத்தை |
| 7. நல்ல செயல் | 8. நல்ல தியானம் |

**புத்தசமயம் பரவல்**

- தாம் அறிந்த உண்மைகளை உலகில் உள்ள அனைவரும் அறிய வேண்டும் என்பதற்காக ஊர்ஊராகச் சென்றார்.
- புத்தரின் கருத்துகளைப் பரப்ப, துறவிகள் முன்வந்தனர். பௌத்தத் துறவிகளின் இந்த அமைப்பு 'சங்கம்' எனப்பட்டது.
- சமுதாய ஏற்றத்தாழ்வுகளால் பாதிக்கப்பட்டிருந்த விவசாயிகள், ஏழைகள், பெண்கள், கடைநிலை ஊழியர்கள் புத்தரின் கருத்துகளை ஏற்றனர்.
- அனைவரும் சமம் என்ற புத்தரின் கருத்து அந்தக் காலத்தில் புதிதாக இருந்தது. இதனால், புத்தர் சென்ற இடமெல்லாம் பௌத்த மதம் பரவியது.
- கி.மு.6 ம் நூற்றாண்டு வரை சமண, பௌத்த மதங்கள் செல்வாக்குடன் பரவலாக பின்பற்றப்பட்டன. மீண்டும் வேத வைதீக வருணாசிரம மதம் செல்வாக்குப் பெறத் தொடங்கியதால் பிற்காலத்தில் சமண, பௌத்த மதங்களின் செல்வாக்கு மங்கத் தொடங்கின.
- பௌத்த சமயத்தைப் பின்பற்றிய அரசர்கள் - அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர். அவர்களில் முக்கியமானவர் அசோகர்.

- கர்மா கொள்கையில் நம்பிக்கை வைத்த புத்தர், கடவுள் கொள்கையை ஆதரிக்கவும் இல்லை. மறுக்கவும் இல்லை. நிர்வாண நிலையை அடைவது என்பதே புத்த சமயத்தின் அடிப்படை கொள்கையாகும்.
- புத்தருக்கு பின்வந்த சமயவாதிகள் போதிசத்துவர்கள் எனப்பட்டனர்.
- கனிஷ்கர் காலத்தில் புத்தமதம், ஹீனயானம், மஹாயானம் என இரண்டாகப் பிரிந்தது.

| **மகாயான புத்த மதம்** | **ஹீனயான புத்த சமயம்** |
|---|---|
| பெருவழி எனப்பட்டது | குறுகிய வழி எனப்பட்டது. |
| புத்தர் கடவுளாக வழிபடப்பட்டார் | புத்தர் சமயத் தலைவராக கருதப்பட்டார். |
| உருவ வழிபாடு இருந்தது | உருவ வழிபாடு இல்லை |
| திபெத், சீனா, ஜப்பான், இந்தியாவில் பரவியது. | மேற்கு நாடுகள், இலங்கை ஆகிய நாடுகளில் பரவியது. |
| சமஸ்கிருத மொழியினை பயன்படுத்தினர். | பாலி மொழி பயன்படுத்தப்பட்டது. |

**புத்தசமயம் பரவ காரணங்கள்**

- புத்தரின் போதனைகள் எளிமையானவை.
- பாலி மொழியில் எழுதப்பட்டன. மக்கள் அனைவரும் சமம் என்ற கொள்கை.
- கோசலம், கௌசாம்பி அரசர்கள், அசோகர், கனிஷ்கர், போன்றோரும் புத்த சமயம் பரவ உதவினர். அசோகர் காலத்தில் புத்த சமயப் போதகர்கள் எகிப்து, சிரியா, மாசிடோனியா சென்றனர்.
- அசோகரின் மகன் மகேந்திரனும், மகள் சங்கமித்திரையும் இலங்கைக்கு சென்றனர்.
- கனிஷ்கர் கல்லத்தில் பர்மா, ஜப்பான், திபெத், மத்திய ஆசிய நாடுகளுக்கு சீனாவின் வழியாக மத போதகர்கள் சென்றனர்.

- பண்டைய சேர அரசர்கள் புத்த சமயத்தை தழுவி ஆதரித்தனர்.
- இலங்கை, பர்மா, திபெத், சீனா, ஜப்பான், தாய்லாந்து ஆகிய நாடுகளில் இன்றளவும் பௌத்தமதம் பின்பற்றப்படுகிறது.

**தொண்டுகள்**

- நாலந்தா, வல்லாபி, காஞ்சி விக்கிரமசீலா போன்ற கல்வி மையங்கள் புத்த சமயக் கொள்கைகளை பரப்பின.
- காஞ்சி, வல்லாபி, நாளந்தா போன்ற இடத்தில் ஸ்தூபங்கள் அமைக்கப்பட்டன.
- காஞ்சியிலும் பர்கட்டிலும் புத்தரின் வரலாற்றை கூறும் சின்னங்கள் உள்ளன.
- குப்தர்கள் காலத்தில் இந்து சமயத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சி புத்த சமயம் வீழ்ச்சியுற காரணமாக இருந்தன.

**வரலாற்றுச் சின்னங்கள்**

- பௌத்த சமய வரலாற்றை ஜாதகக் கதைகள் பெரிதும் விவரிக்கின்றன. கயா, சாஞ்சி, மத்திய பிரதேசத்தில் உள்ள பர்கட் ஆகிய இடங்களில் புத்தர் காலத்தின் பல படைப்புகள் காணப்படுகின்றன.
- அஜந்தா குகை ஓவியங்களும் எல்லோரா சிற்பங்களும் (மகாராஷ்டிரா மாநிலத்தில் ஔரங்காபாத் மாவட்டத்தில் உள்ளன) புத்தரின் சிறப்பை விவரிக்கின்றன. காந்தாரக் கலைச் சிற்பங்களும் புத்த சமயத்தைச் சார்ந்தது.
- பௌத்த சமயத் துறவிகளின் பிரார்த்தனைக் கூடங்கள் சைத்தியங்கள் என்றும், மடாலயங்கள் விகாரங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவை மலைக்குகைகளைக் குடைந்து அமைக்கப்பட்டவையாகும்.
- பௌத்தத் துறவிகளின் விகாரங்கள்(மடங்கள்) மிகுந்த மாநிலம் பீகார்.

**இலக்கியம்**

- புத்தரின் போதனைகள்/ பௌத்த சமயக் கொள்கைகளைக் கூறும் மறைநூலுக்குத் திரிபிடகம் என்று பெயர். இது வினயபிடகம், சுத்தபிடகம் அபிதம்மபிடகம் என்ற மூன்று உட்பிரிவுகளைக் கொண்டது.
- மணிமேகலையும் குண்டலகேசியும் பௌத்த நூல்கள்.
- சமண முனிவர்கள் இயற்றியவை - சிலப்பதிகாரம், நன்னூல் (இலக்கணம்), சீவசிந்தாமணி, வளையாபதி (இலக்கியம்).
- சமணர்களின் புனித நூல்கள் - அங்கங்கள், பூர்வங்கள் என்பனவாகும்.
- வட்டக் காமினி அபயன் என்னும் அரசன் காலத்தில்தான் திரிபிடகம் முதன்முதலில் நூல் வடிவில் எழுதப்பட்டது என்று மகாவம்சம் என்னும் இலங்கை நூல் கூறுகிறது.
- பாலி மொழியில், இதனை "திரிபிடகம்" என்பர். இதற்கு மூன்று கூடை என்பது பொருள்.
- நன்றாகக் கட்டப்பட்ட வீட்டில் மழைநீர் நுழைவதில்லை. நற்சிந்தனை படைத்தவர் உள்ளத்தில் தீய ஆசைகள் நுழைவதில்லை - புத்தர்.
- நம் நாட்டுத் தேசியச் சின்னமான நான்கு சிங்கங்கள் செதுக்கிய உருவம், அசோகரது தூண்களின் முகப்பிலிருந்து எடுக்கப்பட்டது.
- நமது தேசியக் கொடியில் காணப்படும் 24 ஆரங்களைக் கொண்ட சக்கரம், அசோகரின் தூண்களில் காணப்படும் 'தர்ம சக்கரம்' ஆகும்.

## 6. மகா ஜனபதங்கள்

வேத காலத்தின் இறுதியில் புதிய வளமான விளைச்சல் நிலங்களுக்காகவும் கனிம வளங்களுக்காகவும் சிறுசிறு ஆரிய அரசுகளான ஜனபதங்கள் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டன. அதே நோக்கத்திற்காகக் கிழக்கு நோக்கி முன்னேறவும் முற்பட்டனர். இதனால் கங்கைச் சமவெளியின் கிழக்கிலும், தெற்கிலும் இருந்துவந்த ஆரியரல்லாத இனப்பிரிவுகளுடன் மோதல்கள் ஏற்பட்டன. இப்போராட்டங்களினால் சிறிய ஜனபதங்கள் போர்களில்

தோற்கடிக்கப்பட்டதாலோ, தாமாகவே முன்வந்ததாலோ பெரும் மகாஜனபதங்களாக இணைந்தன.

- பல ஜனபதங்களை உள்ளடக்கிய பெரிய அமைப்பாக 'மகாஜனபதங்கள்' உருவாக்கப்பட்டன. இனக்குழு அமைப்பை விட மேம்பட்டு பரந்து விரிந்த அரசுகளாக மகாஜனபதங்கள் இருந்தன.
- புத்தர் வாழ்ந்த காலத்தில் வட இந்தியாவில் 16 மகாஜனபதங்கள் மேலோங்கி இருந்தன. இவற்றில் சில பரம்பரை அரசர்களால் ஆளப்பட்டன. வேறு சில தேர்ந்தெடுக்கப்பட்ட அரசர் குழுக்களால் ஆளப்பட்டன.
- வைசாலி நகரைத் தலைநகராகக் கொண்ட வஞ்ஞிக் கூட்டாட்சியில் 18 குழுக்கள் இணைந்திருந்தன.
- கோசலம், அவந்தி, வத்சம், மகதம் போன்றவை பரம்பரை மன்னராட்சி மகாஜனபதங்களில் வலிமையானவை. இவை தங்களுக்குள்ளும், பிற குடியரசுகளுடனும் போரிட்டுக் கொண்டிருந்தன. மகதம் பிற மகாஜனபதங்களை வென்று இறுதியில் பேரரசாக எழுச்சி பெற்றது.

**மகாஜனபதங்கள்**

- அங்கம், மகதம், கோசல, காசி, வஜ்ஜி, வத்சம், குரு, பாஞ்சாலம், மத்ஸ்யம், சூரசேனம், அஸ்மகம், அவந்தி, காந்தாரம், காம்போஜம்.

**மகதத்தின் எழுச்சி**

**பிம்பிசாரர்(கி.மு. 525 - கி.மு. 500)**

- இன்றுள்ள பீகார் மாநிலத்தின் பாட்னாவைச் சுற்றியுள்ள பகுதி மகதம் என்று அழைக்கப்பட்டது. அதன் தலைநகராக முதலில், 'சிராவஸ்தி' நகரமும், பின்னர், 'இராஜகிருகம்' எனும் நகரமும், இறுதியாகப் 'பாடலிபுத்திரம்' என்னும் நகரமும் இருந்தன.

- அரியங்க வம்சத்தைச் சேர்ந்த பிம்பிசாரர். மிகச்சிறிய அரசாக இருந்த மகதத்தைப் படையெடுப்புகள் மூலமும், திருமண உறவுகள் மூலமும் விரிவுபடுத்தி வலிமையான ஓர் அரசாக மாற்றினார்.
- கயாவிற்கு அருகில் கிரிவ்ராஜாவை தலைநகராகக் கொண்டு அர்யங்க மரபு மகதநாட்டை ஆண்டது.
- கோசல நாட்டு இளவரசி கோசல தேவியை மணந்து கசியை சீதனமாகப் பெற்றார். மேலும் வைசாலி, விதேகம், மதுரா ஆகிய நாடுகளின் இளவரசிகளையும் மணந்தார்.
- அங்க நாட்டு அரசர் பிரம்மதத்தரை போரில் வென்று அங்க தேசத்தை இணைத்தார். மாளவம், காந்தாரம் போன்ற நாடுகளுடன் நட்புறவு கொண்டார்.
- சமணரான பிம்பிசாரர் அதன் வளர்ச்சிக்கு உதவினார்.
- அக்மேனியப் பேரரசர் முதலாம் டேனியசு சிந்து சமவெளியை வெற்றிகொண்டது இவரது ஆட்சிக்காலத்தில்தான்.

**அஜாத சத்ரு(கி.மு. 500 - கி.மு. 475)**

- பிம்பிசாரரின் மகன் அஜாதசத்ரு தனது தந்தையையே சிறையில் அடைத்து ஆட்சியைக் கைப்பற்றினார்.
- இவர் கோசலம், அவந்தி, வைசாலி ஆகிய மகாஜனபதங்கலுடன் நீண்டகாலம் போர் செய்து வெற்றிபெற்று மகதத்துடன் இணைத்தார்.
- பாடலிபுத்திரத்தில் பெரிய கோட்டையை அமைத்தவர் அஜாதசத்ரு.
- இவரது ஆட்சிக்காலத்தில் மகதப் பேரரசு புகழின் உச்சிக்கு சென்றது.
- முதல் புத்த சமய மாநாட்டினை ராஜகிருகத்தில் கூட்டினார்.
- இதற்கு அடுத்ததாக சிசுநாக மரபு ஆட்சியை கைப்பற்றியது.

**சிசுநாகர்**

- அரியங்க வம்சத்தை வீழ்த்தி, சிசுநாகர் ஆட்சியைப் பிடித்தார். சிசுநாகர்களுக்குப் பின் நந்த வம்சத்தினர் ஆட்சிக்கு வந்தனர்.

**நந்த மரபு ( கி.மு. 425 - கி.மு. 325)**

**மகாபத்ம நந்தன்**

- மகாபத்ம நந்தன் என்ற முதல் நந்த மன்னர் விந்திய மலைகளைக் கடந்து தக்காணப் பகுதிகளையும் கைப்பற்றினார்.
- இவர் சிந்து நதி முதல் தக்காணம் வரையில் பரந்து விரிந்த முதல் இந்தியப் பேரரசாக மகதத்தை உருவாக்கினார்.
- சமூகத்தின் கடைசி நிலையில் வைக்கப்பட்டிருந்த சூத்திரர்களான சிசுநாகரும், மகாபதநந்தனும் மன்னர்களாக அடுத்தடுத்து முடி சூடினார். இது ஒரு பெரும்புரட்சி.
- இவர்கள் மகதத்தின் ஆட்சியை வட இந்தியா முழுவதும் பரப்பினர்.
- நந்த வம்சத்துப் பேரரசர்கள் சமண மதத்தைப் போற்றினர்.
- பாஞ்சாலம், காசி, அசுமகம், குரு, மிதிலை, சூர சேனை போன்ற நாடுகளை வென்றார்.
- வட இந்தியா முழுவதையும் தனது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தார்.
- நந்தமரபின் கடைசி அரசர் தனநந்தர்.
- நந்தர்கள் கடவுள் நம்பிக்கையற்றவர்கள்.
- சாணக்கியர் தனநந்தரிடம் மந்திரியாக இருந்தார்.
- அவமானப்பட்ட சாணக்கியர் சந்திரகுப்தரை தட்சசீலத்திற்கு அழைத்துச் சென்று பயிற்சி கொடுத்து பின் தனநந்தரை வெற்றிகொண்டு மௌரியப் பேரரசை நிறுவினார்.

**அலெக்சாண்டரின் இந்திய படையெடுப்பு**

- கி.மு. 6 ம் நூற்றாண்டில் வட இந்தியாவில் பல முடியரசு நாடுகளும், குடியரசு நாடுகளும் இருந்தன. அவைகளில் 16 நாடுகள் மகாஜனபதங்கள் எனப்பட்டன. அதில் அங்கம், காசி, கோசலம், அவந்தி, வத்சம், மகதம் போன்றவை முக்கியமான நாடுகள் அதில் மகதம் பகுதியை ஆண்ட பிம்பிசாரரும், அஜாதசத்ருவும் அந்நாட்டை வலிமையான நாடாக மாற்றினர்.
- கிரேக்க நாட்டைச் சேர்ந்த மாசிடேனியானை ஆண்ட பிலிப்பின் மகனான அலெக்ஸாண்டர் அரிஸ்டாடிலின் மாணவர்.
- தனநந்தர் காலத்தில் இந்தியாவின் மேற்குப்பகுதி வழியாகப் படையெடுத்த அலெக்சாண்டர் இந்தியாவில் 19 மாதங்களே தங்கினார்.
- நெடும் பயணத்தின் காரணமாக, வீரர்கள் களைப்புற்றதாலும் நந்தர்களின் போர்த் திறத்தை அறிந்ததாலும் திரும்பிச் சென்றார்.
- எர்குலசைப் போல் சிறந்த வலிமையுள்ள வீரனாக விளங்கவேண்டுமென விரும்பினார்.
- கி.மு. 335 ல் அரியணை ஏறிய அலெக்சாண்டருக்கு வயது 20.
- கி.மு. 334 முதல் கி.மு. 330 வரை ஆசியா மைனர், சிரியா, எகிப்து போன்ற நாடுகளை தோற்கடித்தார்.
- கி.மு. 328 பாரசீகத்திலுள்ள எல்லா பிரதேசங்களையும், தற்போதைய ஆப்கானித்தானத்தையும் வெற்றிகொண்டு பாரசீகத்தின் மகா மன்னர் என்ற பட்டம் வென்றார்.
- இந்துகுஷ் மலை வழியாக சிந்து நதியைக் கடந்து வந்த அலெக்சாண்டரின் தலைமையை தட்சசீலத்தின் மன்னன் அம்பி ஏற்றார்.
- அலெக்சாண்டரை எதிர்த்த முதல் இந்திய மன்னர் போரசு ஜீலம் பகுதியை ஆண்டவர். இருவரும் ஜீலம் ஆற்றுக் கரைகளில் ஐடாஸ்பெஸ் என்னுமிடத்தில் கி.மு. 326 ம் ஆண்டு எதிர் கொண்டனர்.

- போரில் போரசு தோற்றாலும் ஒரு அரசனைப் போல் நடத்த வேண்டும் என்ற போரசின் துணிச்சல் அலெக்சாண்டரை கவர ஜீலம் பகுதியை அவருக்கே திருப்பித் தந்தார்.
- சீனாப் நதியையும் கடந்து காந்தர்களையும், சங்களர்களையும் வெற்றி கொண்டார்.
- பியாஸ் ஆற்றங்கரையை அடைந்து சோர்ந்து போனதால் திரும்பினார்.
- தான் கைப்பற்றிய பகுதிகளை மூன்றாக பிரித்து, அதில் ஒன்றான இந்தியாவின் வடமேற்குப் பகுதி செல்யூகஸ் நிகேடர் என்பவரிடம் கொடுக்கப்பட்டது. (பின்பு சந்திரகுப்த மௌரியரால் செல்யூகஸ் நிகேடர் தோற்கடிக்கப்பட்டார்)
- கி.மு. 323 ல் பாக்தாத்திற்கு அருகில் பாபிலோன் என்னுமிடத்தில் தனது 33வது வயதில் மரணமடைந்தார்.
- நியர்சசு என்பவர் அலெக்சாண்டரின் நண்பர்.